Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu
www.nimirvu.org

பார்வை – 42 | ஐப்பசி, கார்த்திகை 2020 | பக்கங்கள் – 24 | விலை – ரூபா 20.00




## கல்விக்கான இலட்சியப் பயணத்தில் தமிழ் இளையோர்கள்



பனை மரங்களின் முக்கியத்துவமும் நடுகையும்



சீனாவின் இராஜதந்திரம்



வெளிவிவகார கட்டமைப்பே உடனடித் தேவை

– ஆராயும் அறிவே நிமிர்வு –



# பனை மரங்களின் முக்கியத்துவமும் நடுகையும்

தியாகராஜா பன்னீர்செல்வம்
(ஓய்வுபெற்ற அலுவலர், பனை அபிவிருத்திச் சபை)

கடந்த கால போரினால் பெருமளவு பனை மரங்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் அழிக்கப் பட்டுள்ளன. பின்பு வீடு கட்டும் தேவைக்காகவும் பெருமளவு பனை மரங்கள் அழிக்கப்பட்டன. இன்றும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இவைக்கு மாற்றீடாக பனை விதைகள் நாட்டப்படு கின்றனவா எனக் கேட்டால், இல்லை என்பதே பதிலாக உள்ளது. இருந்தாலும் இன்று உள்ள சூழல் நேயம் சார்ந்த சில தன்னார்வ அமைப்புக்களும், நிறுவனங் களும், தனியாரும் எடுக்கும் முயற்சிகளால் பனை விதைகள் தொடர்ந்து நாட்டப்பட்டு வருகின்றன.

எம் சூழலுக்கு முதலில் பனை மரங்கள் ஏன் அவசியமானது? அதன் முக்கியத்துவத்தை பார்ப் போம். தானே விழுந்து தானே முளைத்து வளரும் தனித்துவமான மரமான பனை ஒருவித்திலைத் தாவரமாகும். வறண்ட நிலத் தாவரமான இது நார் வேர் தொகுதியைக் கொண்டிருப்பதனால் அதன் வேர்கள் மண்ணை இறுக பற்றிப் பிடிக்கின்றன. இதனால் மண்ணரிப்பிலிருந்து நிலம் பாதுகாக்கப் படுகின்றது. நிலத்தடி நீரை மேலே கொண்டு வரும் ஆற்றல் இதன் வேர்களுக்கு உண்டு என்கின்றனர் பனை வல்லுநர்கள். வேரிலிருந்து, குருத்து வரை மனிதனுக்கு பயன்படுகின்றது. கால்நடைகளுக்கும் சிறந்த உணவாகிறது.

பனையின் உற்பத்திகளுக்கு உலகெங்கும் நல்ல மதிப்பு உள்ளது. இதனால் இதனை நம்பி வாழும் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த முடியும். பனை வடக்கு கிழக்கில் சேர்ந்துள்ளதால் எமது பண்பாட்டுச் சின்னமாகவும், இனத்தின் அடை யாளச் சின்னமாகவும் விளங்குகின்றது.

பனை நடுகைக்கு ஏற்ற காலம் எது? பெண் பனையிலிருந்து ஆடி மாத நடுப்பகுதியிலிருந்து

## “ஐப்பசியில் பனம் விதைகள் நாட்டினால் எப்பசியினையும் போக்கும் கற்பகத்தரு என்பது முன்னோர் வாக்காகும்”

பனம்பழங்கள் பெறப்படுகின்றன. புரட்டாதி இறுதியும், ஐப்பசி மாதமுமே பனை நடுகைக்கு ஏற்ற காலப் பகுதியாகும். “ஐப்பசியில் பனம் விதைகள் நாட்டினால் எப்பசியினையும் போக்கும் கற்பகத்தரு” என்பது முன்னோர் வாக்காகும்.

**ஒரு விதையுள்ள பழம், இரு விதையுள்ள பழம், மூன்று விதையுள்ள பழம் என மூன்று வகை யாக பனம்பழங்கள் கிடைக்கின்றன. ஒரு விதையுள்ள பழம் பெண் பனையாகவும், இரு விதையுள்ள பழத் தினுள் ஒன்று, ஆணாகவும் மற்றையது பெண்ணா கவும், மூன்று விதையுள்ள பழத்தில் இரண்டு ஆண் பனைகளும் ஒன்று பெண் பனையாகவும் வளரும் என அனுபவமுள்ளவர்கள் சொல்கிறார்கள்.**

பனை விதை நடுகையின் போது அவதானிக்க வேண்டியவற்றை அடுத்து பார்ப்போம். நல்ல இன பனைகளில் இருந்து விதைகளை தேர்வு செய்தல் முக்கியமானது. பொதுவாக இரு விதைகளுள்ள பனம் பழங்களை தேர்வு செய்தால் நல்லது. உயரம் குறைந்த பனை மரங்கள், தோல் முழுவதும்

கறுப்பான பழம், கறுப்பானதும் பரிமுள் பக்கத் திற்கு எதிர்ப்பக்கம் செம்மஞ்சள் நிறமுள்ள பனம்பழம், மற்றும் கறுப்பும் செம்மஞ்சளும் சேர்ந்த பனம்பழங்கள் சுவை மிகுந்ததாகவும் நிறைய களியினையும் கொண்டிருக்கும். இவற்றை தெரிவு செய்து நடுகை செய்தால் சிறந்த இனப்பரம்பலை பெற்றுக் கொள்ளலாம்.

**ஒரு பனை மரம் ஆண்டுக்கு**

180 லீட்டர் பதநீர்/ கள்ளு
25 கிலோ பனங்கட்டி / பனை வெல்லம்
16 கிலோ பனங்கற்கண்டு
12 கிலோ தும்பு
10 கிலோ விறகு
10 கிலோ ஓலை
20 கிலோ நார்

இவற்றையும் விட இன்னும் அதிக பயன்களைக் கொடுக்கின்றது. பனை மூலம் கிடைக்கும் உணவுப் பொருட்கள் மருத்துவ குணம் நிறைந்தவை.

கனதியான விதைகள் நடுகைக்கு உகந்த தாகும். அப்படி பார்த்து நடுகை செய்தால் 90 வீத மானவை முளைப்பதனை முன்னரே உறுதி செய்ய முடியும். அத்துடன் களிமண் தரையிலும், உப்பு செறிவு கூடிய இடங்களிலும் நடுகை செய்வதனை தவிர்த்தல் நல்லது. சிறு குழி வெட்டி பனம் பழ விதையின் உள் பகுதி தரையை தொடுமாறு பார்த்து நடுகை செய்ய வேண்டும்.

நீர்நிலைகள், குளங்கள், கால்வாய்களின் அணையின் வெளிப்புறத்தில் இருந்து சற்று தள்ளி பனையை நாட்டலாம். நிரையாக பனை விதை நடுகை செய்யும் போது 2.5 மீற்றர் இடைவெளியினை பேண வேண்டும். இடங்களின் அளவை பொறுத்து 2.5 X 2.5 மீற்றர், 3 X 3 மீற்றர், 5 X 5 மீற்றர் அளவு களில் நேராகவும், சதுர அமைப்பாகவும் நடுவது சிறந்தது. தானாக ஆங்காங்கே விழுந்து முளைத்து வளரும் பனை மரங்கள் கூடலாக நெருக்கமாக வளர்வதனால் எதிர்பார்த்த பயன்களை பெற முடியாது.

தோப்பாக நடுகை செய்யும் போது இயலுமான வரை கால்நடைகள் வடலியை கடிக்காதவாறு பாதுகாப்பு வேலிகளை அமைத்தால் பத்து வருடங் களில் பனையில் இருந்து பயன்களை பெறக் கூடிய தாக இருக்கும். திக்கம் வடிசாலை அமைந்துள்ள காணியில் நாட்டப்பட்ட பனம் விதைகள் 10 வருடங்களில் வளர்ந்து பயன் தந்ததை அனுபவ ரீதியாக நேரடியாகவே உணர்ந் தோம். தோப்பினுள் ஊடுபயிராக அன்னமுன்னா, நெல்லி, கொய்யா, மா, மரமுந்திரிகை, இலுப்பை, வேம்பு, விளாத்தி, புளி, இப்பில் போன்ற மரங்களை யும் நடுகை செய்யலாம். பெரும் ஏக்கர் கணக் கான காணிகளில் எல்லை மரங்களாகவும், யானை வேலிகளாகவும் பனையை நாட்டலாம்.

**“திக்கம் வடிசாலை அமைந்துள்ள காணியில் நாட்டப்பட்ட பனம் விதைகள் 10 வருடங்களில் வளர்ந்து பயன் தந்ததை அனுபவ ரீதியாக நேரடியாகவே உணர்ந்தோம்”**

பனம் விதைகளை சேகரித்து வெயில்படாத இடங்களில் பாதுகாப்பதே நல்லது. சேகரிக்கும் விதைகளை இயன்றளவு அவை முளைக்க முன் விதைக்க வேண்டும். இல்லாவிடின் வேர் விடும் போது விதைகளை இடம்மாற்றினால் அந்த ஒரே வேர் முறியும் தறுவாயில் அந்த பனை மரம் முளைக் காது போய்விடும். இதனால் நீண்டகாலத்துக்கு சேமித்து வைத்திருந்து பனை விதைகளை நடுகை செய்வதனை தவிர்க்க வேண்டும்.

கம்போடியா நாட்டிலும் அதிகளவு பனை மரங்கள் காணப்படுகின்றன. எங்கு திரும்பினாலும் பனைமரங்களும், பனை ஓலையால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களையும் காணமுடியும். கம்போடியா நாட்டுமக்கள் பனை மரத்தினை பொக்கிசமாக பாதுகாத்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் பனை விதைகள் நடும் இயக்கங்கள், அமைப்புகள் அதிகமுள்ளன. எமது பகுதிகளிலும் பல்வேறு சூழல் சார்ந்தவர்கள் இப் பெரும் பணியை முன்னெடுத்து வருகின்றார்கள். பயன்பாடின்றி இருக்கும் நிலங்கள் முழுவதும் பனம் விதைகளை நாட்டி மண் வளத்தை பேணுவதோடு நிலத்தடி நீரின் இருப்பையும் உறுதி செய்வோம்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு
ஆசிரியர் பார்வை

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

# முதலில் எங்களைக் கட்டமைப்போம்

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஜோ பைடன் தேர்தலில் வென்றுள்ளார். துணை ஜனாதிபதியாக இந்தியாவின் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட கமலா ஹாரிஸ் வந்துள்ளார். அவரது வெற்றிக்கு வலதுகரமாகவிருந்தவர் ரோகினி லக்சுமி கோசோகுளு என்கிற ஈழத்தமிழ் பெண் என்கிறார்கள்.

இப்போது தமிழர் தரப்பிலிலிருந்து அரசியல் வாதிகளும், அமைப்புகளும் பதவியேற்கப் போகும் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துகளையும் ஈழத் தமிழர்கள் சார்பில் பல்வேறு கோரிக்கைகளையும் விடுத்து வருகின்றார்கள். நல்லவிடயம்.

ஆனால் இவர்களுடாக ஈழத்தமிழர்களுக்கு நல்லது நடக்கும் என்று நினைப்பது வெறும் பகற் கனவே. அரசற்ற தரப்பான தமிழ்மக்கள் ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எப்போதும் எந்த அரசாக இருந்தாலும் தங்கள் முழுமையான இராஜதந்திர உறவுகளையும், கொடுக்கல் வாங்கல் களையும் அரசோடு தான் வைத்துக் கொள்வார்கள். அதுவும் இந்துசமுத்திரத்தின் கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடத்தில் இருக்கும் ஒரு நாடு என்ற அடிப்படையிலும், இலங்கையின் புவிசார் மூலோபாய முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் இனி வருகின்ற ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்க அரசும் இலங்கையை மென்மையாகவே கையாளும் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். சீனாவும் இங்கே வலுவாக காலூன்றியுள்ளதால் அமெரிக்காவும் இலங்கை அரசை அனுசரித்து போகவே பார்க்கும்.

ஆனாலும், அமெரிக்காவின் ஜனநாயக கட்சியை சேர்ந்தவர்கள் மனிதஉரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். முன்னாள் சனாதிபதி ஒபாமா போல பைடனும் இனநல்லிணக்கம் மற்றும் இனப்பிரச்சினை தொடர்பில் அக்கறை காட்டலாம். ஆனாலும் ஜனநாயககட்சியை சேர்ந்த ஒபாமா ஆட்சியிலிருந்த போது தான் முள்ளிவாய்க்காலில் இனவழிப்பை சிறிலங்கா அரசு நடத்தி முடித்தது என்பதை மறந்துவிடலாகாது.

தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட கமலாஹாரிஸ் ஆகட்டும் ஈழத்தை பூர்வீகமாக கொண்ட ரோகினி கோசோகுளு ஆகட்டும் அமெரிக்க நலன் சார்ந்த அதன் வெளியுறவுக் கொள்கையை மீறி இவர்கள் ஒன்றும் செய்து விடப் போவதில்லை.

எல்லாவற்றுக்கும் முதல் அப்படி எங்களை நோக்கி ஆதரவுக்கரம் நீட்டப்பட்டால் தமிழ்மக்கள் சார்பில் யாரோடு பேசுவது என்பது தொடர்பில் இவர்களுக்கு பெரும் குழப்பம் வரும். அரசற்ற தரப்பாகிய எங்களிடம் வலுவான வெளிநாட்டுக் கொள்கையோ, வெளிவிவகார கட்டமைப்போ கிடையாது. அதனை உருவாக்குவதற்கான நீண்டகால தரிசனங்களோ எங்கள் மத்தியில் இல்லை.

நாடுகளுக்கு மட்டுமல்ல தேசிய இனங்களுக் கும் வெளிநாட்டுக் கொள்கை அவசியமானது. எங் களிடம் வலுவான வெளிவிவகாரகட்டமைப்பு இல்லாதபட்சத்தில் நாங்கள் மற்றவர்களால் கையாளப்படுவோர்களாக மாறுவோம். இதனை மாற்றியமைக்க வேண்டுமானால் சரியான வெளிவிவ கார கட்டமைப்பை நிறுவுவதே காலத்தின் தேவை.

எந்தப்பிடிமானமும் இல்லாமல் நின்று கொண்டு அமெரிக்காவிடம் அல்லது ஏனைய அரசாங்கங் களிடம் அது வேண்டும் இது வேண்டும் என கோரிக்கை விடுக்காமல், முதலில் எங்களை சரியான முறையில் கட்டமைத்துக் கொள்ளுவோம். அதன் பின்னர் எம் கோரிக்கைகளை வலுவாக முன்வைப்போம்.

அரசாங்கங்கள் மட்டுமல்ல உலகெங்கும் இருக்கும் முற்போக்குசக்திகளுடன் ஒரு புரிந் துணர்வை ஏற்படுத்துவதற்கும் அவர்களுடன் ஒரு கூட்டுறவுக்குப் போவதற்கும் கட்டமைக்கப் பட்ட ஒரு கொள்கைக் கூட்டு காரியத்தை இலகு வாக்கும். ஆகவே மற்ற சக்திகள் எமக்கு உதவவும் அவர்களுக்கு நாம் உதவவும் அதற்கான பேரங்களைப் பேச எங்களை முதலில் கட்டமைத்துக் கொள்வோம்.

- செ. கிரிசாந் -


# வெளிவிவகார கட்டமைப்பே உடனடித் தேவை

அமுது

இலங்கைத்தீவு பேரரசுகளின் உதைபந் தாட்டக் களமாக மாறிவிட்டது. மக்களைக் கையாள் வதை விட அரசாங்கங்களைக் கையாள்வது தான் பேரரசுகளின் முதல் தெரிவாக இருக்கும். இந்தி யாவும் அப்படித்தான். அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை அரசாங்கத்தை தான் இந்தியா கையாள முனைகிறது. அப்படி இலங்கை அரசாங்கத்தை கையாள முடியாமல் போகும் பட்சத்தில் தமிழ் மக்களை ஒரு கருவியாக கையாண்டு இலங்கை அரசை பணிய வைக்கும். இதைத் தான் இலங்கை இந்திய உடன்படிக்கை வரையிலும் இந்தியா செய்தது. திரும்பவும் அப்படி ஒரு நிலைமை தான் வரும். அரசைக் கையாள முடியாமல் போகும் போது தமிழ்மக்களைக் கையாள வருவார்கள். இந்த இடத் தில் தமிழ்மக்களை அவர்கள் கையாள முன் தமிழ் மக்கள் பொருத்தமான கட்டமைப்பு ஒன்றை உரு வாக்க வேண்டும். அப்படியான கட்டமைப்பு இருந் தால் தான் இப்படியான வெளித்தரப்பை தமிழ்மக்கள் எவ்வாறு புத்திசாலித்தனமாக கையாளலாம் என யோசிக்கலாம்.

தன்னுடைய பிடிக்குள் இருந்து இலங்கை வழுவி சீன சார்பாக போகும் போது இலங்கை அரசை ஒரு வழிக்கு கொண்டுவர இந்தியா மீண்டும் தன்னுடைய நலன்களுக்காக ஈழத்தமிழர்களை பயன்படுத்தும் நிலையை எப்படி பார்க்கின்றீர்கள் என்ற கேள்விக்கு அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் அளித்த பதிலிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2015 ஆம் ஆண்டு வெளித்தரப்பைக் கையாள தமிழ்மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வந்தது. ஆட்சிக் கவிழ்ப்பின் போது தமிழ்மக்களும் உடந்தையாக இருந்தார்கள். இந்த ஆட்சிக்கவிழ்ப்புக்கு வேலை செய்த சக்திகள் தமிழ்மக்களை கையாண்ட போது தமிழ் தரப்புக்கள் அது தொடர்பில் வெளித்தரப்புக்க ளோடு சரியான பேரத்தை செய்யவில்லை. அப்படி யொரு பேர அரசியலுக்கு உரிய ஒழுக்கமே கூட்டமைப் பிடம் இருக்கவில்லை. பேர அரசியலை செய்வதற் கான ஒழுக்கம் என்பது நாங்கள் எந்த அடிப்படை யில் பேரத்தை செய்யப் போகிறோம் என்பதிலிருந்து வரும். அதற்கு நாங்கள் எங்களை ஒரு தேசமாக கருத வேண்டும். ஒரு தேசம் என்ற அடிப்படையில்



**“வெளித்தரப்புக்கள் எங்களை தங்கள் நோக்கு நிலைகளில் இருந்து கையாளும் போது அவர்களை நாங்கள் எங்கள் நோக்கு நிலையில் இருந்து எப்படி கையாள்வது என்பது தான் இராஜதந்திரம்”**

நாங்கள் எங்களுக்கென்ற வெளியுறவுக் கொள் கையை கொண்டிருக்க வேண்டும். அந்த வெளியுறவுக் கொள்கையின் பிரகாரம் எங்கள் இறுதி இலக்கு இலங்கைத்தீவில் சமஷ்டிக் கட்டமைப்பு என்று வைத்துக் கொள்வோம். அதுதான் எங்களின் இறுதி இலக்கென்றால் அதனை நோக்கி ரணில்–மைத்திரி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் விதத்தில் வெளி நாடுகள் மீது எப்படி அழுத்தங்களை பிரயோகிக் கலாம் என்று யோசிக்க வேண்டும். அந்த அழுத்தங் களைப் பிரயோகிக்கும் விதத்தில் வெளிநாடுகளோடு எப்படிப் பேரம் பேசலாம் என்று திட்டமிட வேண்டும்.

நாங்கள் உங்களுக்கு மகிந்தவைக் கவிழ்த்து அடுத்த ஆட்சியை உருவாக்குவதற்கு எங்களின் வாக்குப் பலத்தை வழங்குவோம். எங்களுடைய வாக்குப் பலத்தை நாங்கள் உங்களுக்கு தருவோம் என்று சொன்னால் எந்த அடிப்படையில் தரப் போகிறோம், என்ன நிபந்தனைகளின் பேரில் தரப் போகிறோம், என்கிற ஒரு பேரத்தை 2015 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வைக்க வில்லை. இன்றைக்கும் அப்படியொரு பேரத்தை வைப் பதற்கு தமிழ் மக்கள் மத்தியில் எந்தவொரு கட்டமைப் பும் இல்லை. அப்படியொரு கட்டமைப்பு இல்லாத காரணத்தினால் தான் புலம்பெயர் தமிழர்கள் மத்தி யிலும் தாயகத்தில் மத நிறுவனங்களுக்கு ஊடாகவும் இந்தியா சில செல்வாக்குகளை செலுத்த முற்படு வதாக அவதானிப்புகள் வருகின்றன.

எப்படி 1989 இலங்கை – இந்திய உடன் படிக்கைக்கு முன்னுக்கு ஈழ விடுதலை இயக்கங் களுக்கு இந்தியாவினூடாக பயிற்சியும், ஆயுதங் களும், பின்தளமும் கொடுத்து ரஷ்யாவும் அமெரிக்கா வும் தங்களுடைய கெடுபிடிப் போரை இலங்கைத் தீவில் எங்களைக் கொண்டு முன்னெடுத்தார்களோ அதே போல் கருவியாக கையாளப்படும் நிலைமை இனியும் ஈழத்தமிழர்களுக்கு வரக் கூடாது.

முந்தி ஆயுதமும் சீருடையும் போராட்ட முகங்களாக இருந்தன. இப்பொழுது காவி எமது முகமாக வரப் பார்க்கிறது. நாங்கள் முன்னுக்கு சீருடையோடும் ஆயுதத்தோடும் இருந்தோம். இப் போது காவியோடும் உருத்திராட்சத்தோடும் இருக்கும் நிலை வரக்கூடாது. எனவே இந்த விடயத்தில் ஈழத்தமிழருக்கு இப்படி வெளித்தரப்புக் கள் தங்களை கையாள முடியாதபடி தாங்கள் ஒரு கட்டமைப்பாக உருவாக வேண்டிய தேவை இருக் கிறது. துரதிஷ்டம் என்னவென்றால், எங்கள் மக்கள் பிரதிநிதிகள் பலரிடம் இது பற்றிய தரிசனம் இல்லை. மக்களை இந்தக் கட்டமைப்புக்குள் கொண்டுவரக் கூடிய கொள்ளளவோடும் அவர்கள் இல்லை. ஆனால் என்ன செய்வது? அவர்களைத் தானே மக்கள் தெரிவு செய்து வைத்திருக்கிறார்கள்? இந்நிலையில் இந்த மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய வெளி விவகார கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் தாங்கள் நினைத்தபடி தனி யோட்டம் ஓட முடியாதபடி அவர்களை அந்த அமைப்பு கட்டுப்படுத்த வேண்டும். அதில் புத்தி யீவிகள், நலன்விரும்பிகள், செயற்பாட்டாளர்கள் போன்ற எல்லோரும் இருக்க வேண்டும். தாயகத் துக்கு வெளியில் தமிழகம், புலம்பெயர்ந்த சமூகம் என அங்கும் இருக்கக் கூடிய ஆளுமைகளையும் இணைத்து பலமான ஒரு குழுவாக அது இருக்க வேண்டும். அந்தக் குழு தான் வெளிவிவகாரக் கொள்கையை வடிவமைக்க வேண்டும். அத்துடன் வெளிவிவகார செல்நெறியையும் தீர்மானிக்க வேண்டும். அந்தக் குழுவை மீறி மக்கள் பிரதிநிதி கள் வெளிவிகார முடிவுகளை எடுக்க முடியாது. இந்த நிலைமையை கொண்டு வந்தால் மட்டும் தான் எம் இலக்கை நோக்கி முன்னேற முடியும்.

வெளித்தரப்புக்கள் எங்களை தங்கள் நோக்கு நிலைகளில் இருந்து கையாளும் போது அவர்களை நாங்கள் எங்கள் நோக்கு நிலையில் இருந்து எப்படி கையாள்வது என்பது தான் இராஜதந்திரம். எங்களுக் காக யாரும் அன்பு கொண்டு காதல் கொண்டு வரமாட்டார்கள். பேரரசுகள் பேரரசுகள் தான். அவர்கள் தங்கள் நோக்கு நிலைகளில் இருந்து தான் எங்களை அணுகுவார்கள். ராஜீய அர்த்தத்தில் அன்பு, காதல் கிடையாது. உணர்வுபூர்வம் கிடையாது. முழுக்க முழுக்க அறிவுபூர்வமான அணுகுமுறை. எங்களுடைய நலனும் உங்களுடைய நலனும் எங்கே சந்திக்கின்றன. அந்த பொதுப் புள்ளியில் பேரத்தை வைத்துக் கொள்ளலாம். இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை வந்திருக்கிறது. எங்களின் நலன்களும் இந்தியா உட்பட்ட வெளித்தரப்புக்களின் நலன்களும் சந்திக்கும் ஒரு நிலைமை வருகிறது. இலங்கைத் தீவு பேரரசுகளின் உதைபந்தாட்டக் களமாக எதிர் காலத்தில் குத்துச் சண்டைக் களமாகவும் வர முடியும். இப்படியானதொரு நிலைமையில் நாங்கள் ஒரு கட்டமைப்பை உடனடியாக உருவாக்க வேண்டும்.

நாங்கள் இன்று பிடி கழன்ற கத்திகள். இவற்றை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. அவை நன்னும் ஒழிய வெட்டாது. எந்த வல்லரசும் எங்களை தான் விரும்பும் படி கையாண்டுவிட்டுப் போகும் நிலைமை தான் எங்களிடம் இருக்கும். இதனால் தான் நாங்கள் சொல்கிறோம், வெளித்தரப்புக்களைக் கையாள்வதற்கு ஒரு சமயோசிதக் கூட்டுக்கு போங்கோ என்று. நாங்கள் தூய்மைவாதிகள், நாங்கள் யாராலும் கையாளப்பட மாட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. இந்த பிடி கழன்ற கத்தி இல்லை என்றால் இன்னொரு பிடி கழன்ற கத்தியை கையாண்டுவிட்டு போய் விடுவார்கள். ஏனைய பிரதிநிதிகளை அவர்கள் கையாண்டு விட்டுப் போய் விடுவார்கள். ஒரு இனத்தினுடைய அடுத்த கட்டத்தையும் அவர்கள் தீர்மானித்து விட்டுப் போய் விடுவார்கள். ஆகவே எல்லோரையும் பொறுப்புக் கூற வைக்கும் ஒரு பொதுக் கட்டமைப் புக்கு நாங்கள் போக வேண்டும். அந்தக் கட்டமைப்பு தந்திரோபாய ரீதியிலானதாக இருக்க வேண்டும். கொள்கை என்பது ஒன்று தான். வெளியுறவுக் கொள்கை சார்ந்து நாங்கள் ஒன்றாக இயங்கப் போகிறோம். தனி ஓட்டம் யாரும் ஓட முடியாது. யாரும் போய் சரணடைய முடியாது. யாரும் காதல் கடிதம் கொடுக்க முடியாது. யாரும் பணத்தை கைமாற்ற முடியாது. காவியும் உருத்திராக்கமும் வாங்க முடியாது.

தமிழ்மக்களின் நலன்களும் ஏனைய பேரரசுகளின் நலன்களும் எங்கே பொருந்திப் போகின்றன் என்று பார்த்து அந்த அடிப்படையில் ஒரு பொதுப் புள்ளியைக் கண்டுபிடித்து பேரத்தை வையுங்கள். கழன்ற கத்தியாக இருக்காதீர்கள். பிடியை திருத்துங்கள். தேர்தலின் பின் உருவான திலீபன் நினைவுகூரல் பிரச்சினையை வைத்துக் கொண்டு ஒரு கூட்டு வந்தது. அது ஒரு புனிதமான கூட்டு இல்லை. தேர்தலில் எல்லாரும் தோற்று விட்டார்கள். அதனால் வந்த கூட்டு தான் அது. தோல்வி தான் இவர்களுக்கு ஆசான்.

தேர்தலில் கூட்டமைப்பு மட்டும் தோற்க வில்லை. கஜேந்திரகுமாருக்கும் தோல்வி தான், விக்கினேஸ்வரனுக்கும் தோல்வி தான். விக்கினேஸ் வரனுக்கும் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. அரும்பொட்டு வெற்றி. ஆனால், கட்சி உருவாக் கிய குறுகிய காலத்தில் வென்றிருக்கிறார். கூட்ட மைப்பை விட்டு வெளியேறியவர்கள் வெல்ல முடியாது என்கிற மாயையை உடைத்திருக்கிறார். கஜேந்திரகுமார் தரப்புக்கு பத்துவருடங்களுக்கு பின் இரண்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன. ஏனைய ஆசனங்கள் யாருக்கோ போயுள்ளன. இப்படிப் பார்த் தால் இவர்களுக்கு தோல்வி. கூட்டமைப்பு தோற்று விட்டது என்று நாங்கள் சொல்கிறோம். கூட்டமைப்பு மட்டும் தோற்கவில்லை. யார் வென்றிருக்கிறார் என்று பாருங்கள். எங்கே வாக்குகள் சிதறி இருக் கின்றன என்று பாருங்கள்.

இன்று கிழக்கில் பிரதேசவாதம் புத்தெழுச்சி கொண்டிருக்கின்றது. அவர்கள் தெற்கை நோக்கிப் போவதனை வேறு வேறு விதமாக நியாயப்படுத்த தொடங்கி விட்டார்கள். தெற்கை நோக்கி போவது ஒரு பிரச்சினையாக அவர்களுக்கு இல்லை. அதற்கு நியாயம் கூற வெளிக்கிடுகிறார்கள். இந்தநிலையில் எல்லாருக்கும் தோல்வி இது. தோல்வியின் அடிப் படையில் தான் இவர்கள் திலீபன் நினைவுகூரல் விடயத்தில் ஒன்றானார்கள். இந்த நிர்பந்தக் கூட்டு தற்காலிகமானது. இது உடையக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் ஒரு தேவை வந்திருக்கிறது. தேவை தான் கூட்டுக்களை உருவாக்கும். கொள்கையினால் வரும் கூட்டுக்களை விடவும் தேவையினால் வரும் கூட்டுக்களே அதிகம். கொள்கை ரீதியான கூட்டை உருவாக்க வெளிக்கிட்டால் அப்படி ஒரு கூட்டை உருவாக்க முடியாத நிலைமை தான் இப்பொழுது இருக்கிறது. தமிழ் மக்கள் பிரதிநிதிகளில் கொள்கை ரீதியிலான கூட்டை உருவாக்குவதென்றால் சிறு கூட்டைத்தான் நீங்கள் உருவாக்கலாம். பெருங் கூட்டுக்கு போக முடியாது. நீங்கள் பெருங் கூட்டுக்குப் போக வெளிக்கிட்டால் தந்திரோபாயமாக சில விட்டுக் கொடுப்புக்களை செய்யத் தான் வேண்டும். பெருங் கூட்டைத் தான் உலகம் பிரமிப்போடு பார்க்கும். பெருங்கூட்டோடு தான் உலகம் கதைக்கும். எப்படி திலீபனின் விவகாரத்தில் நினைவுகூர்தல் என்ப தனை வைத்துக் கொண்டு நாங்கள் ஒன்றிணைந் தோமோ அந்த விவகாரம் இனியும் வரும். இனி வரும் நினைவுகூர்தல்களின் போதும் அப்படியொரு விவகார மையக் கூட்டுக்கான தேவை இருக்கும்.

வெளிவிவகாரம் கட்சிகளுக்கு உரியதல்ல. அது தமிழ்த் தேசத்திற்கு உரியது. நெடுங்கால நோக்கிலானது. நீண்டகால நோக்கிலான ஒரு தீர்க்கதரிசனம் மிக்க ஒரு வெளியுறவுக் கட்டமைப் புக்கு நாங்கள் போக வேண்டும். அதை முழுக்க மக்கள் பிரதிநிதிகளான அரசியல்வாதிகள் துஷ்பிர யோகம் செய்யாதபடி வெகுசன சமூகப் பிரதிநிதி களும் புத்தியீவிகளும் அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். அது மிக முக்கியமானது. இல்லையெனில் பணம் கைமாறும். புத்தியீவிகளும், இராஜதந்திர நாட்டமுள்ளவர்களும் அது தொடர்பில் கரிசனமும் புரிதலும் உள்ளவர்களும் இணைந்து உருவாக்கிய ஒரு குழுதான் இவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்படி போனால் தான் இன்று பேரரசுகளின் உதை பந்தாட்டக் களமாக மாறியிருக்கும் இலங்கைத்தீவில் அவர்கள் தமிழ்மக்களை நோக்கி வரும் போது தமிழ் மக்கள் அவர்களிடம் சரியான பேரத்தை வைக்கலாம். இல்லையென்றால் தமிழ்மக்களை ஒவ்வொருவரும் உதிரி உதிரிகளாக அவர்கள் கையாள முற்படுவார் கள். ஏற்கனவே தமிழ்மக்கள் திரையத் தொடங்கி விட்டார்கள். நாங்கள் புலப்பெயர்ச்சியால் நீர்த்துப் போய் விட்டோம். தோல்விகளால் நீர்த்துப் போய் விட்டோம். தலைவர்களும் எங்களை நீர்த்துப் போக செய்து விட்டார்கள். கட்சிகளும் எங்களை நீர்த்துப் போக செய்து விட்டன. இனியும் நாங்கள் ஒன்றா காமல் உதிரி உதிரிகளாக கையாளும் நிலையை வெளித்தரப்புக்கு வழங்குவோமாக இருந்தால் நாங்கள் மேலும் சிதறிப் போகும் நிலை தான் உள்ளது.

# வெடுக்குநாறி மலையும் அண்மைக்கால சர்ச்சைகளும்







நெடுங்கேணி சானுஜன்,
கிழக்குப் பல்கலைக்கழக மாணவன்.

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இலங்கையில் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிவன் கோயிலாகும். வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஒலுமடு, பாலமோட்டை கிராமத்திலிருந்து கிட்டத்தட்ட நான்கு கிலோ மீற்றர் காட்டு வழிப்பாதையினூடாகச் சென்று வெடுக்குநாறி மலையை அடையலாம். கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமையான இந்த மலையின் வரலாறானது பல சிறப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது.

இந்த மலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெடுக்குநாறி மரங்கள் அடர்த்தியாகச் செறிந்து காணப்படுகின்றமை இந்த மலைக்கு வெடுக்குநாறி மலையென பெயர் வரக்காரணமாக இருந்திருக் கலாம். 19 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இம்மலை "வெடுக்குநாறி மலை" எனப் பெயர் பெற்றிருந்ததை ஜே.பி.லூயிஸ் இன் "இலங்கையின் வன்னி மாவட்டங் கள் ஒரு கையேடு" என்ற நூலின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

நயினாமடுவிலிருந்து சுமார் மூன்று மைல் தொலைதூரத்தில் வெடுக்குநாறி மலை அமைந் துள்ளது. நயினாமடுக் குளத்திற்கு இந்த மலையில் இருந்தே தண்ணீர் வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது. இந்த மலையானது ஏறத்தாள 300 அடி உயரம் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்த மலையைச் சுற்றியுள்ள பகுதியில் ஏராளமான சிறுசிறு மலைக் குன்றுகளும் காணப்படுகின்றன. இதற்கு அண்மையில் நாகர்குளம் எனப்படும் புராதன சிறு குளம் ஒன்று உள்ளது. மேலும், இந்த மலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் இலங்கையில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த நாகர் இனத்தின் குடியிருப்புகள் இருந்ததற்கான தொல்லியற் சான்றுகள் ஏராள மாகக் கிடைக்கின்றன. குறிப்பாகக் நாகர்கள் கட்டு மானங்களுக்குப் பயன்படுத்திய "தூண்தாங்கு கல்" அதாவது உருண்டை அல்லது சமச்சீரற்ற கற்களில் சிறு சதுரமாகத் துளையிடப்பட்ட கற்கள் இந்த வெடுக்கு நாறி மலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமாக உள்ளன. எனவே வெடுக்குநாறிமலைக்கு அருகில் உள்ள நாகர்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் நாகர்களின் தொல்லியல் சிதைவுகள் என்பன அப்பகுதியில் நாகர்கள் வாழ்ந் தமைக்குச் சான்று பகிர்கின்றன.

வெடுக்குநாறிமலையில் உள்ள பிராமி எழுத் துக்கள் தொடர்பாக நோக்குகின்ற போது பொதுவாக இலங்கையின் பிராமி சாசன காலம் எனப்படுவது கி.மு. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் பிராமி வரிவடிவத்தினைப் பயன்படுத்தி பிராகித மொழியில் கல்வெட்டுக்கள், மட்பாண்டங்கள், குகைகள், நாணயங்கள் போன்ற வற்றில் குறிப்புக்கள் எழுதப்பட்டன. அவ்வாறான சாசனங்களில் தமிழ் மொழிக்குரிய சிறப்பெழுத்துக் களான ற, ன, ழ, ள என்பவற்றின் பயன்பாடும், தமிழக பிராமியின் சிறப்பெழுத்துக்களான ஈ, ம போன்ற எழுத்துகளும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன.

அதனடிப்படையில் வவுனியா பெரிய புளியங் குளம், அம்பாறை குடுவில், திருகோணமலை

சேருவில், வெல்கம் விகாரைக் கல்வெட்டு போன்றவை தமிழர்கள் பற்றி கூறுகின்ற பிராமிக் கல்வெட்டுக்களாகும். இலங்கையில் தமிழர்கள் பற்றிக் குறிப்பிடும் ஐந்து கல்வெட்டுக்களில் அனுராதபுரத்தில் உள்ள ஒன்று தவிர மீதி நான்கு கல்வெட்டுக்களும் தமிழர்களின் பூர்வீக இடங்களான வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ளன. எனவே கி.மு 3 ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழர்கள் ஒரு இனமாகவும், தமிழ் மொழியில் பரீட்சார்த்தமுடையவர்களாகவும் இலங்கையில் இருந்துள்ளனர்.

வெடுக்குநாறி மலையில் நீர்வடி விளிம்புகள் உள்ள இரண்டு குகைகளும், நீர்வடி விளிம்புகள் உள்ள இரண்டு சாய்வான மலைக்குன்றுகளும் காணப்படுகின்றன. இவற்றில் குகைப்பகுதிகளில் நீர்வடி விளிம்பிற்கு சற்று கீழ் பகுதியில் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவை தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவ்வெழுத்துக்கள் கி.மு. 1 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட பிராமி எழுத்துக்களாகும். இதில் தமிழகப் பிராமிக்குரிய சிறப்பெழுத்துக்களின் பயன்பாடுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், இங்குள்ள இரண்டு குகைகளும் வேறு வேறாகக் காணப்பட்டாலும் அவ்விரு குகைகளுக்கும் இடையே சுரங்கவழிப்பாதைகள் இருந்துள்ளன. அவை தற்பொழுது தூர்வடைந்த நிலையில் காணப்படுகின்றன. இங்குள்ள பெரிய குகையானது இரண்டு மலைகளுக்கிடையில் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பெரிய குகைக்குள் புராதன காலத்து செங்கல் இடிபாடுகளும் காணப்படுகின்றன. மற்றைய நீர்வடி விளிம்பு உருவாக்கப்பட்டுள்ள மலைப்பகுதியானது நாகம் படம் எடுப்பதைப் போன்ற வடிவத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது. அதில் தற்போது நாக வழிபாட்டை பிரதிபலிக்கும் சின்னங்கள் வைத்து வணங்கப்படுகின்றன.

மலையின் கீழ்ப்பகுதியில் உள்ள குன்றில் சிறிய நீர்த் தடாகம் ஒன்று உள்ளது. அது அக்காலத்தில் நீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மிகவும் நேர்த்தியான முறையில் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது. அத்தடாகத்தில் நீர் எந்தக்காலத்திலும் வற்றுவதில்லை. அத்தடாகத்திலிருந்தே கோயில் பயன்பாட்டிற்கு நீர் பெறப்படுகின்றது. மேலும், மலை உச்சியில் மிகவும் நேர்த்தியான முறையில் வட்ட வடிவம் உடைய சிறிய குழிகள் சில அமைக்கப்பட்டுள்ளன. அக்குழிகள் அக்காலத்தில் தானியங்கள், மூலிகைகள் அரைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

வெடுக்குநாறி மலையின் மேல் பகுதியை சென்றடைவதாயின் மூன்று வருடங்களுக்கு முன்னர் மரங்கள், கொடிகளை பிடித்துத்தான் மேல் பகுதியை சென்றடைய வேண்டும். ஆனால் அண்மைக் காலத்தில் கோயில் நிர்வாகத்தினரின் முயற்சியால் மலையின் மேல் பகுதிக்குச் சென்றடைவதற்கு அலுமினிய வேலைப்பாடுகளுடன் கூடிய படிகள் பொருத்தப்பட்டுள்ளன. கோயில் நிர்வாகத்தினரின் இத்தகைய செயற்பாட்டுக்கு எதிராக தொல்லியல் திணைக்களத்தினால் வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக வெடுக்குநாறி மலையின் கடவுள் வழிபாடு தொடர்பாக நோக்குகின்ற போது மலையடி வாரத்தில் பிள்ளையார், முருகன், நாகம், வைரவர் மற்றும் நாட்டார் தெய்வங்கள் போன்றவற்றின் சிலைகள் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. மலை உச்சியின் மேலே சிவலிங்கம் (ஆதிலிங்கேஸ்வரர்), அம்மன் போன்ற விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளதுடன் ஆதிலிங்கேஸ்வரரை பிரதிபலிக்கும் லிங்க வடிவத்தினை ஒத்த பெரிய செங்குத்தான கல்லொன்றும் உள்ளது. இந்தக் கோயிலை அமைப்பதற்கு மதிமுகராசா (ஆலய பூசகர்) குடும்பத்தினர், பூபாலசிங்கம் குடும்பத்தினர், வவுனியா வடக்குப் பிதேச செயலாளர் பரந்தாமன் மற்றும் கிராமசேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர்,

**“ 19 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இம்மலை “வெடுக்குநாறி மலை” எனப் பெயர் பெற்றிருந்ததை ஜே.பி.லூயிஸ் இன் “இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு” என்ற நூலின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது”**

அக்கிராமத்து மக்களின் பங்களிப்பு அளப்பெரியது.

வெடுக்குநாறி மலையில் 2009 யுத்தத்திற்கு முன்னர் இந்துக்கள் அங்கு சென்று சுதந்திரமாக வழி பாடுகளில் ஈடுபட்டு வந்தனர். யுத்தத்திற்குப் பின்னர் சில பேரினவாதிகள் அதனைப் பௌத்த தலமாக மாற்றுவற்கான முயற்சியில் ஈடுபட்ட வேளையில் அப்பகுதி மக்கள் அதற்கு எதிராக புனரமைப்பு வேலை களில் ஈடுபட்டனர். அதன்போது அவ்வாலயத்திற்கு சிவலிங்கம், பிள்ளையார் போன்ற விக்கிரகங்களை "சிவன் அருள் இல்லம்" நிறுவனத்தின் தலை வராகிய வைத்தியர் நமசிவாயம் அவர்கள் உபயமாக வழங்கியதைத் தொடர்ந்து வெடுக்குநாறி மலையில் சிவலிங்கம், பிள்ளையார், முருகன், அம்மன், நாகம், வைரவர் மற்றும் நாட்டார் தெய்வங்களின் சிலை களும் பிரதிஸ்டை செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு இலங்கை தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களத்தினர் வெடுக்குநாறி மலைக்கு மக்கள் சென்று வழிபாடுகளை மேற் கொள்ளத் தடை விதித்திருந்தனர். ஆனாலும் உள்ளூர் மக்களின் எதிர்ப்பினால் இத்தடையினை தொல் பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் நெடுங் கேணி காவல்துறையினர் தற்காலிகமாக நீக்கி வழி பாடுகளை மட்டும் மேற்கொள்ள அனுமதித்தனர். ஆனாலும் கோயிலைப் புனரமைக்கவோ, கிணறு வெட்டவோ, மலைக்கு ஏறுவதற்கான படிய மைக்கவோ, புதிய கட்டடங்களை அமைக்கவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டுரிமை வழங்கப்பட்ட போதிலும் வழிபாட்டிற்குச் செல்கின்ற மக்கள் சுதந்திரமாக வழிபாடுகளை மேற்கொள்ள முடியாமல் இருக் கின்றது. காரணம், பொலிசார், உளவுத்துறையினர், தொல்லியல் திணைக்களத்தினர், வனவள பாது காப்புத் திணைக்களத்தினரின் அச்சுறுத்தலேயாகும். இன்றுவரை நினைத்த நாட்களில் நினைத்த நேரத்தில் வழிபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ளது.


2020 இந்த வருடம் வெடுக்குநாறி ஆதிலிங் கேஸ்வரர் கோயிலின் வருடாந்த திருவிழாவினை தடுக்கும் நோக்கில் நெடுங்கேணி பொலிசாரினாலும், தொல்லியல் திணைக்களத்தினாலும் வவுனியா நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கு சரியான காரணம் இல்லாமையினால் புரட்டாதி 16, 2020



அன்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு ஆலய உற்சவத்தை வழமைபோன்று நடாத்தவும், ஆலய நிர்வாகத்தினருக்கு எவ்வித இடையூறுகளோ, அச்சுறுத்தலோ செய்யக் கூடாதென நெடுங்கேணி பொலிசாருக்கு நீதவான் பணிப்பு விடுத்தார். அதனால் தடைகளையும் தாண்டி இவ்வருடம் 10 நாட்கள் ஆலயத்திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

தொல்லியல் சட்டத்தின் பிரிவு 15 C யின் கீழ் நெடுங்கேணிப் பொலிசாரினால் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகம் மீது தொடுக் கப்பட்ட வழக்கின் பிரகாரம் குற்றம் சாட்டப்பட்ட ஆலய நிர்வாகத்தலைவர், செயலாளர், ஆலய பூசகர் ஆகியோரின் கடும் வாதப்பிரதி வாதங்களின் பின்னர் ஐப்பசி 9,2020 இல் அவர்களை மேலதிக பிணையில் செல்ல நீதவான் அனுமதி வழங்கினார். குறித்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி சிற்றம்பலம் ஐயா தலைமையில் சிரேஸ்ட சட்டத்தரணிகள் திரு. தயாபரன், திரு.திருவருள், திரு.கனகரட்ணம் சுகாஸ், சட்டத்தரணி காயத்திரி உள்ளிட்ட பதினெட்டு சட்டத் தரணிகள் மேற்குறிப்பிட்ட திகதியில் மன்றில் முன்னிலையானார்கள்.

ஆலய நிர்வாகத்தை (குற்றம் சாட்டப்பட்டவர் களை) பதினான்கு நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பொலிசார் நீதிபதியைக் கோரினார்கள். பொலிசாரின் கோரிக்கையை ஆட்சேபித்து சட்டத் தரணிகள் கடுமையான வாதங்களை முன்வைத் தார்கள். பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உள்ள குறைபாடுகளின் காரணத்தாலும், சந்தேக நபர்கள் தொடர்ந்தும் சந்தேக நபர்களாகவே காணப்படுவதாலும் சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்கமுடியாது என்பதனாலும் மூவருக்கும் பிணை வழங்குமாறு கோரினார்.



மேற்கூறப்பட்ட காரணங்களை ஆராய்ந்த நீதிபதி தொல்லியல் சார் வழக்கொன்றிற்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதவான் நீதிமன்றுக்கு இல்லாத போதும் சட்டத்தரணிகள் தரப்பின் நியாயப்பாடுகளின் நிமித்தமும் பொலிசாரின் விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுகளின் நிமித்தமும் மூவருக்கும் தலா ஐம்பதாயிரம் பெறுமதியான மேலதிக சரீரப்பிணை வழங்குவதாக மன்றில் தெரிவித்தார். மேலும் வழக்கு மீள ஐப்பசி 23,2020 இற்கு ஒத்திவைக்கப்பட்டது.

வெடுக்குநாறிமலையில் அண்மைக்காலத்தில் தொல்லியல் ஆய்வுகள் நடைபெற்றதா என்று கேட்டால் ஆம் நடைபெற்றது என்பதே பதிலாகும். ஜனாதிபதி செயலகம் மற்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைவாகவே வெடுக்குநாறிமலை ஆய்வு செய்யப்படுவதாக வவுனியா மாவட்டத்தின் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தை 10,2019 அன்று கொழும்பிலிருந்து வந்திருந்த தொல்லியல் நிபுணர்கள், வவுனியா மாவட்ட தொல்லியல் திணைக்களத்தினர், நெடுங்கேணி காவல் துறையினர், இராணுவத்தினர் போன்றோர் வருகை தந்து ஆய்வினை மேற்கொண்டிருந்தனர். குறித்த ஆய்வு செய்வதனை இடைநிறுத்த சென்ற ஆலய நிர்வாகத்தினருக்கும் தொல்லியல் திணைக்களத்தினருக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதன்போது குறித்த திணைக்கள அதிகாரி பின்வருமாறு கூறினார். “நீண்டகாலமாக வெடுக்குநாறிமலையின் பிரச்சினை தொடர்கின்றது. ஆனால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாமல் பிரதேச மக்கள் இருக்கின்றார்கள் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஜனாதிபதி செயலகத்திற்கு

## “இனிவரும் காலத்தில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரரைப்போல் எமக்கு சொந்தமான தொன்மையான இடங்களை நாம் மீட்டெடுப்பது பொறுப்புமிக்க கடமையாகும்”

தெரியப்படுத்தி இருக்கிறார். அதனடிப்படையில் ஜனாதிபதி செயலகம் தொல்லியல் திணைக்களத்தினரை உடனடியாக ஆய்வினை மேற்கொண்டு தரவுகளைத் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கமைவாகத்தான் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.” அந்த ஆய்வின் போது வெடுக்குநாறிமலையில் காணப்படும் பிராமி கல்வெட்டையும் பிரதி எடுத்துச் சென்றனர்.

வன்னி பிராந்தியத்தில் எல்லைக் கிராமங்கள் பறிபோவதைப் போன்றே வெடுக்குநாறி மலை, வாவெட்டிமலை, குருந்தூர்மலை, கும்பகர்ணன் மலை, ஒதியமலை, போன்ற மலைப் பகுதிகளும் பௌத்த மயமாக்கப்படும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் அப்பகுதிகளுக்கு மக்கள் சென்று பார்வையிடுவதற்கும், வழிபாடுகளை மேற்கொள்ளவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. காரணம் கேட்டால் அது தொல்லியல் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள பிரதேசம் எனக் கூறப்படுகிறது. உதாரணமாக சிகிரியா, சிவனொளி பாதமலை, தூபராம, ருவன்வெலிசாய, போதிமரக் கோயில் போன்றவை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றவையாகும். அங்கு மக்கள் சென்று சுதந்திரமாக வழிபாடுகளை மேற்கொள்ளுகின்ற போது. இங்கு ஏன் அவ்வாறு சுதந்திரமான வழிபாடுகளை செய்யமுடியாமல் இருக்கின்றது? ஒரே நாடு இரு சட்டங்களா? சட்டம் எல்லோருக்கும் பொதுவானது என்றால் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கும் வழிபாடு மேற்கொள்வதற்கும் அனுமதிக்க வேண்டும்.

ஆனால் அனுமதிக்காமல் இருப்பதற்கு காரணம் தமிழர்களின் தொல்லியல் பண்பாட்டுச் சின்னங்களை மறைத்து மாற்றியமைக்கும் முயற்சியாகும். இனிவரும் காலத்தில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரரைப்போல் எமக்கு சொந்தமான தொன்மையான இடங்களை நாம் மீட்டெடுப்பது பொறுப்புமிக்க கடமையாகும். தங்களது கடந்த கால வரலாறு, தோற்றம், கலாசாரம் ஆகியவற்றை அறியாத மக்கள் வேரற்ற மரம் போன்றவர்கள்.




# காலநிலை நெருக்கடியை எதிர்கொள்வதில் பெண்களின் பங்கு

செல்வி ஸ்ராலினி இராசேந்திரம்,
ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்,
கிளைமத்தோன் யாழ்ப்பாணம் 2020.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் நமது வாழ்முறையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக மனிதரின் நாளாந்தச் செயற்பாடுகள் இந்த உயிர் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளன. இந்த மாற்றங்களின் விளைவுகளில் ஒன்றாகவே கோவிட் நோயின் தீவிர பரம்பலையும் நாம் பார்க்க வேண்டியுள்ளது. உயிரினப் பல்வகைமை இழப்பு காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்களை ஒவ்வொன்றாகச் சந்தித்து வருகிறோம். இவற்றுள் காலநிலை நெருக்கடி (Climate Emrgency) நாம் எதிர்நோக்கியுள்ள மிகப்பெரும் சவாலாக உள்ளது.

சென்ற ஆண்டில் உலகம் முழுவதும் காலநிலை நெருக்கடி நிலைக்கான தீர்வுகளை வலியுறுத்தி நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பெருநகரங்களில் இளையோர் ஒரேநேரத்தில் "கிளைமத்தோன்" அலையாக அணி திரண்டனர். இலங்கையில் இருந்து முதன் முறையாக யாழ்ப்பாண நகரமே இந்த மாற்றத்திற்கான செயல்முனைவில் தன்னை இணைந்துகொண்டது. அதன் விளைவாக நமது இளைஞர்களிடையே காலநிலை நெருக்கடி தொடர்பான விழிப்புணர்வும் சூழல் பற்றிய அக்கறையும் பெருமளவில் அதிகரித்துள்ளன. குறிப்பாக நிலைபேறான உணவு தொகுதியை நம் மண்ணில் உருவாக்குவது பற்றி நிறையப் பேசினோம் செயற்படுத்தினோம். எவ்வாறான சிக்கல்களை எதிர் கொள்வோம் என்று நினைத்தோமோ அத்தனையும் இன்று கண்முன்னே நேரில் காண்கிறோம்.

காலநிலை மாற்றத்தின் ஆபத்துக்களை அதிகமாக எதிர்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தில் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. தாழ்வான நிலப்பரப்புகளைக் கொண்ட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பேரழிவின் விளிம்பில் இப்போது உள்ளன எனலாம். பருவமழை பொய்த்துப் போதல், திடீர் வெள்ளப்பெருக்கு, கடல் நீர் உட்புகல், நிலத்தடி நீர் உவராக மாறுதல் போன்ற நிகழ்வுகள் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இனியும் "காலம் இருக்கிறது" என்றோ "வேறு வேலை இருக்கிறது" என்றோ ஒதுங்கி இருந்தால் பேரழிவுகளையே நம் மக்கள் சந்திக்க வேண்டிவரும். இயற்கை தொடர்பாகச் சிந்திக்கச், செயற்பட இளைஞர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்ட வேண்டியமை இன்று நம் முன்னால் உள்ள பெரும்பணியாகும்.

நிலைபேறான இயற்கைவழி வாழ்வியல் தொடர்பான சிந்தனையைத் தூண்டவும், செயல் முனைவுகளை ஊக்குவிக்கவும் "கிளைமத்தோன் யாழ்ப்பாணம்" பெருநிகழ்வு ஒரு நல்ல சந்தர்ப்பத்தினை உருவாக்குகின்றது. இந்த ஆண்டு கார்த்திகை மாத நடுப்பகுதியில் (13, 14, 15 ஆம் திகதிகளில்) இணையவழியில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் புத்தாக்கங்களையும், மாற்றத்திற்கான செயற்திட்டங்களையும் சமர்ப்பிக்கவுள்ளவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பெண்கள் ஆவர். சென்ற ஆண்டு நிகழ்விலும் கணிசமான அளவு பெண்கள் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று நம் சமூகத்தில் பொலித்தீன் / பிளாஸ்ரிக் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள், பொது இடங்களில் கழிவுகளை அகற்றும் முயற்சிகள், பாடசாலை மட்டத்தில்

விழிப்புணர்வினை உருவாக்கும் செயல்முனைவுகள் எனச் சகல பணிகளிலும் பெண் செயற்பாட்டாளர்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்து வருவதை நாம் அவதானிக்க முடிகிறது. பெண்களை முன்னிலைத் தலைவர்களாகக் கொண்ட சமூக மாற்றத்திற்கான இளையோர் அமைப்புக்கள் பலவும் உருவாகி வருகின்றமை பெருநம்பிக்கை தருகின்ற மாற்றமாகும். இதைவிட சென்ற ஆண்டில் இடம்பெற்ற "கிளைமத்தோன் யாழ்ப்பாணம்" பெருநிகழ்வில் வல்லமை, பண்பாட்டு மலர்ச்சிக் கூடம் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த பெண் செயற்பாட்டாளர்கள் அரங்கச் செயற்பாடுகள் ஊடாக காலநிலை நெருக்கடிநிலை தொடர்பான விடயங்களை மக்கள் மனங்களில் ஆழப்பதியும் வண்ணம் கொண்டு சென்று சேர்த்தனர்.

இவ்வருடமும் கிளைமத்தோன் பெருநிகழ்வின் ஒரு அங்கமாக எதிர்வரும் கார்த்திகை 14 ஆம் திகதி பி.ப 4 மணி முதல் இணையவழியில் இடம்பெறவுள்ள 'பண்பாட்டு மாலை' நிகழ்வில் பல்வேறு ஆற்றுகைச் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், இளம் செயற்பாட்டாளர்கள் குறிப்பாகப் பெண்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உலக அளவில் காலநிலை நெருக்கடிக்கெதிராக மக்களையும் அரசுகளையும் செயற்படத் தூண்டும் செயற்பாட்டாளர்களில் முதன்மையானவர்களாகப் பெண்களே விளங்குகின்றனர். கிரீட்டா துன்பேர்க் என்ற சுவீடன் நாட்டைச் சேர்ந்த பதின்மவயதுப் பெண் மிகத்துணிச்சலாக மாற்றத்துக்காகப் பேசுகிறார். செயற்படத் தயங்கும் உலகத் தலைவர்களையும் காலநிலை மாற்றத்திற்குத் துணைபோகும் பெருவணிக நிறுவனங்களையும் நேருக்கு நேர் எதிர்கொள்ளும் அவரது துணிச்சல், திறமை நம் பெண்களுக்கும் குறிப்பாக இளையோருக்கும் அவசியமானது. எந்தப் பெரிய சக்தி எதிராக இருந்தாலும் இளையோரும் பெண்களும் நினைத்தால் மாற்றம் சாத்தியமே என்ற நம்பிக்கையை அவர் நம் எல்லோரினதும் மனங்களில் விதைக்கிறார்.

மேற்குலகில் கிரீட்டா போன்று ஆபிரிக்காவிலும் துணிச்சலான பெண் செயற்பாட்டாளர்கள் அநேகர் உள்ளனர். கென்ய நாட்டுப் சூழலியற்

**"பெண்களை முன்னிலைத் தலைவர்களாகக் கொண்ட சமூக மாற்றத்திற்கான இளையோர் அமைப்புக்கள் பலவும் உருவாகி வருகின்றமை பெருநம்பிக்கை தருகின்ற மாற்றமாகும்"**

செயற்பாட்டாளரான வஞ்சிரா மாத்தாய் அவர்கள் தனித்துவமானவர். உலக அளவில் செல்வாக்கு மிக்க நூறு ஆபிரிக்கப் பெண்களில் ஒருவராக வஞ்சிரா விளங்குகின்றார். பசுமைப் பட்டி இயக்கத்தை வெற்றிகரமாக செயற்படுத்தியதன் மூலம் நோபல் பரிசு பெற்ற வங்காரி மாத்தாய் அவர்களின் மகளே வஞ்சிரா ஆவார்.

நவம்பர் 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு இணையவழியில் நடைபெறவுள்ள சிறப்புக் கலந்தாய்வில் பெருமதிப்புக்குரிய கென்ய நாட்டுச் சூழலியற் செயற்பாட்டாளரான வஞ்சிரா மாத்தாய் அவர்கள் கலந்துகொண்டு பேசவிருப்பது நமது பணிகளுக்கு ஒரு உலகளாவிய கௌரவத்தினைப் பெற்றுத் தருவதாக அமைகிறது. நிகழ்வில் Zoom செயலி ஊடாக இணைந்துகொள்ள Meeting ID – 817 5484 7355. மேலும் விவரங்களை அறிய 0764658482 என்ற அலைபேசி இலக்கம் மற்றும் md@suvadi.org எனும் மின்னஞ்சல் முகவரியூடாகத் தொடர்பு கொள்ளுங்கள். இந் நிகழ்வில் இளையோர் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிப்பதன் மூலமே காலநிலை நெருக்கடியை எதிர்கொள்ள நாமெல்லோரும் ஒன்றிணைந்திருப்பதை வெளிக்கொண்டுவரலாம்.

**"இயற்கைவழி வாழ்வுக்கு திரும்புவோம் இளையோர் நாம் இயல்பாக வாழ்வோம்"**

**(இந்தக் கட்டுரையாளர் செல்வி. ஸ்ராலினி இராசேந்திரம் ஓர் இளம் தொழில்முனைவர் ஆவார். யாழ் மாவட்டச் சிறுதொழில் முயற்சியாளர் சங்கத்தின் முன்னைநாள் தலைவராகவும் சிலகாலம் பணியாற்றியுள்ளார். இயற்கைவழி இயக்கததின் முக்கிய செயற்பாட்டாளராகிய இவர் 'கிளைமத்தோன் நிகழ்வு' ஒழுங்கமைப்புக்கான பணிகளையும் மேற்கொள்கிறார். கட்டுரையாளரை 0779866409 என்ற அலைபேசி இலக்கம் மூலமாகவும் stali91@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்புகொள்ளலாம்.)**

# சங்கம் அங்கத்தவர்களுக்கானது!

## யாழ்கோவின் தலைவர் விளக்கம்





-துருவன்-

பால்மாவை விட அன்றன்றே கால்நடைகளில் இருந்து பெறப்படும் உடன்பாலை அருந்துவது தான் ஆரோக்கியமானது என அறிவுறுத்தி வருகிறார்கள் மருத்துவர்கள். ஆனால், எங்கள் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பால் எங்கள் பகுதி மக்களுக்கே போய் சேருகிறதா என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

யாழில் பால் விற்பனை தொடர்பிலான சிறு கட்டுரை நிமிர்வு இதழின் கடந்த வைகாசி – ஆனி இதழில் வெளியாகி இருந்தது. அதில் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் (யாழ்கோ) மீது சில குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. முக்கியமாக பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் பாலில் சில பாலகங்களில் கலப்படம் இடம்பெறுவதாக கூறப்படுவது தொடர்பிலும், யாழ்கோவில் பால் கிடைப்பனவு நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறித்தும், எமது மக்களுக்கு பால் தேவை உள்ள நிலையில் இங்கிருந்து பால் தென்பகுதிக்கு விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பிலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

யாழ்கோ தொடர்பிலான பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் விளக்கமளிக்கிறார் அதன் தலைவர் ரட்ணராஜா கிருஷ்ணராசன்.

யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேசங்களில் உள்ள நூற்றுக்கணக்கான கால்நடை வளர்ப்பாளர்கள் எங்கள் சங்கத்தில் அங்கத்தவராக இருந்து பாலை விநியோகித்து வருகின்றார்கள். சங்கம் எங்களுடையது அல்ல அங்கத்தவர்களுக்கானது. இங்குள்ள உத்தியோகத்தர்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தும் விடயம் இதுவாகும்.

**“சங்கம் எங்களுடையது அல்ல அங்கத்தவர்களுக்கானது. இங்குள்ள உத்தியோகத்தர்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தும் விடயம் இதுவாகும்”**

யாழ்கோ பாலகங்கள் காலை 5.30 – 10.30 வரையும் மாலை 2.00 – 5.00 வரையும் எட்டு மணி நேரம் திறந்திருக்கும். கால்நடை வளர்ப்பாளர்களிடம் இருந்து நாங்கள் 75 ரூபாவுக்கு பாலை கொள்வனவு செய்கின்றோம்.

பொதுவாக எங்களுக்கு கிடைக்கின்ற பாலை முதலில் நேரடியாக நுகர்வோர்களுக்கு கொடுத்து பின் எஞ்சியதனை எங்களது பால் சார்ந்த உற்பத்தி தேவைகளுக்கு பயன்படுத்துகின்றோம். எங்களிடம் இப்போது 2000 லீற்றர் பாலை தான் பழுதாகாமல்

வைத்திருக்கும் கட்டமைப்பு உள்ளது. அதில் எஞ்சுவது தான் வெளியே போகின்றது. 5000 லீற்றர் பாலை சேமித்து வைக்கக் கூடிய ஒரு செயல்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அது நிறைவடையும் பட்சத்தில் இங்கிருந்து பால் தென்பகுதிக்கு செல்லாது. எங்கள் மக்கள் உற்பத்தி செய்யும் பால் எங்கள் மக்களின் தேவைகளுக்கே முதலில் பயன்படும்.

நீங்கள் சொல்வது போல் எந்நேரமும் பாலை கிடைக்க வழி செய்வதற்காக 200 லீற்றர் கொள்ளள வுடைய பாலை பழுதடையாமல் வைத்திருக்கும் இரு இயந்திரங்களை பல இலட்சம் செலவில் கொள்வனவு செய்ய உள்ளோம். முதலில் பரீட் சார்த்தமாக பகலில் முழுநேரமும் இரு இடங்களில் தொடர்ச்சியாக கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை களை எடுத்து வருகின்றோம். இத்திட்டம் கூடிய விரைவில் செயற்படுத்தப்படும்.

யாழ் மாவட்ட கால்நடை உற்பத்தியாளர் களிடம் இருந்து பெறப்படும் பால் இங்குள்ள தர நிர்ணயங்கள் மூலம் பரீட்சிக்கப்பட்டே கொள்வனவு செய்யப்படுகின்றது. எங்களது பாலகங்களில் பாலை கொள்வனவு செய்யும் பொதுமக்கள் லக்டோ மீற்றரை பயன்படுத்தி பாலின் அடர்த்தியை பார்த்து கொள்வனவு செய்ய முடியும். இதனை நாங்கள் பத்திரிகை, சுவரொட்டி விளம்பரங்கள் மூலமும் வெளியிட்டிருந்தோம். இதனையும் விட பாலகங்களில் அடிக்கடி பரிசோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

பொலித்தீன் பைகளில் பால் கொடுப்பதனை தற்போது நிறுத்தியிருக்கிறோம். பொதுமக்கள் வீடுகளில் இருந்து போத்தலோ, வேறு கொள்கலன் களோ கொண்டு வந்து பாலை வாங்கி செல்ல முடியும். சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்கில் தான் மேற்படி முயற்சியை எடுத்து இருக்கின்றோம்.

உண்மையில் இங்குள்ள உத்தியோகத்தர் களுக்கான சம்பளம் திருப்தியானது அல்ல. இங்குள்ள ஊழியர்களுக்கான சம்பளத்தை கூட்டுறவு ஆணைக் குழுவே தீர்மானிக்கிறது.

எங்கள் தனிப் பாலிலான பானத்திற்கு நல்ல மதிப்பு உள்ளது. எங்களது நெய்க்கு இங்கு மட்டுமல்ல உலகின் பல்வேறு நாடுகளிலும் நல்ல மதிப்பு உள்ளது. பால் இனிப்புகளிலும் 100 வீதம் பாலே உள்ளது. இவையெல்லாம் உடனுக்குடன் விற்று தீர்ந்துவிடும். தென்னிலங்கையில் இருந்து வரும் யோகர்ட் க்கு சமமான தரத்தில் இங்கு யோகர்ட் தயாரிக்கப்படு கின்றது. ஐஸ்கிறீம், ஐஸ் ஜொலி உற்பத்திகளுக்கும் நல்ல மதிப்பு உள்ளது. எங்களது பால் மிகை உற்பத்தி யாக இருந்தால் பன்னீர் செய்வோம்.

அரச, தனியார் நிறுவன நிகழ்வுகள் மற்றும் திருமண நிகழ்வுகளுக்கு சூடான பால் மற்றும் சுவையூட்டப்பட்டு குளிரூட்டப்பட்ட பால் யாழ் கோவினால் நேரடியாக கொண்டு சென்று விநியோகிக்கப்படுகின்றது. அதனை மூன்று வகையான அளவுள்ள கோப்பைகளில் கொடுக்க லாம். ஏற்கனவே பல நிகழ்வுகளிலும் எங்களது பால் தான் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பால் தேவை யெனில் யாழ்கோவின் தலைமை அலுவலகத்தை இந்த தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளலாம். -0213212926-

10.10.2020 அன்று இவ்விளக்கம் பதிவுசெய்யப்பட்டது.

**நிமிர்வு வாசகர்களே,**

**தபால் முகவரி:**
**தமிழ் ஊடகத் திரட்டு,**
**லக்சுமி கட்டிடம்,**
**ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**

மின்னஞ்சல் முகவரி: nimirvueditor@gmail.com

**நிமிர்வு இதழ் தொடர்பிலான தங்களின் காத்திரமான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு எழுதி அனுப்பலாம். மேலும், வேறெங்கும் பிரசுரமாகாத தங்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு சார்ந்த கட்டுரைகளையும் அனுப்பி வைக்கலாம். தரமானவை பிரசுரிக்கப்படும்.**

# தமிழ் மக்களுக்கான வெளிநாட்டுக் கொள்கை

- சி.அ.யோதிலிங்கம் -



வெளிநாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் உறவுகளைப் பேணுவதற்கு அடிப்படையாக உள்ள கொள்கையாகும். நாட்டின் தேசிய நலனே வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் முக்கிய இடத்தை வகிக்கும்.

தேசிய நலன் என்பது பாதுகாப்பையும் பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இவை தவிர புவிசார் அரசியற் சூழல், சர்வதேச அரசியற் சூழல், உள்நாட்டின் சமூக அமைப்பு, ஆட்சி யிலிருக்கும் கட்சிகளின் அரசியல் நிலைப்பாடு என்பனவும் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிப் பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நாடுகளுக்கு மட்டும்தான் வெளிநாட்டுக் கொள்கை தேவையென்றில்லை. விடுதலைக்காக போராடும் தேசிய இனங்களுக்கும் வெளிநாட்டுக் கொள்கை அவசியமானதாகும். குர்திஸ் போராட்டம், கொசோவா போராட்டம், தென் சூடான் போராட்டம் என்பவற்றில் போராட்ட சக்திகள் தங்களுக்கென ஒரு வெளிநாட்டுக் கொள்கையை வரையறுத்து செயற்பட்டிருக்கின்றன. இந்த வகையில் தமிழ் மக்களுக்கும் வெளிநாட்டுக் கொள்கை அவசியமான தாகும்.

இலங்கைத் தீவு முன்னெப்போதையும் விட சர்வதேச நிகழ்ச்சி நிரலுடன் இறுக்கமாகப் பிணைக்கப் பட்டுள்ளது. கொரோனாவுக்குப் பின்னர் இப் போக்கு மேலும் அதிகமாகலாம். இதனால் சர்வதேச நிகழ்ச்சி நிரல் செல்லும் இடமெல்லாம் இலங்கைத் தீவும் இழுபட்டுச் செல்லும் நிலையே உண்டு. தமிழ்த் தரப்பும் சர்வதேச நிகழ்ச்சி நிரலுடன் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தமிழ் மக்களுக்கென தெளிவான வெளிநாட்டுக் கொள்கை யும், அதனை முன்னெடுக்கக் கூடிய பயிற்சி பெற்ற இராஜதந்திர பரப்புரைக் குழுக்களும் (lobbyists) இல்லாமல் சர்வதேச நிகழ்ச்சிநிரலைக் கையாள முடியாது. இங்கு தமிழ் மக்களுக்கான வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிப்பதில் தமிழ்த் தேசிய நலனே முக்கிய இடத்தை வகிக்க வேண்டும்.

இலங்கைத் தீவில் செல்வாக்குச் செலுத்துவ தற்காக போட்டிபோடும் அமெரிக்க–இந்திய மேற் குலகக் கூட்டு, மற்றும் சீன அணிகளில் முதலாவது அணியையே தமிழ் மக்கள் சார்ந்து நிற்கக் கூடிய நிலை உள்ளது. சிறீலங்கா அரசு சீனாவைச் சார்ந் திருப்பதே இதற்கு பிரதான காரணமாகும். இதைவிட இந்தியாவில் தமிழ்நாடு ஒரு மாநிலமாக இருப்பதும், மேற்குலக நாடுகளில் புலம்பெயர் மக்கள் அதிகள வில் வாழ்வதும் ஏனைய காரணிகளாக உள்ளன. தமிழர் தாயகம் இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக் குள் இருப்பதாலும் இந்தியா நிற்கும் அணியைச் சார்ந்து நிற்க வேண்டிய தேவையும் உண்டு. இதற்காக சீனாவை முழுமையாக ஒதுக்கவேண்டிய கட்டாய மில்லை. அங்கும் தமிழ்தரப்பு தான் செயற்படுவதற் கான வெளிகளைத் தேடவேண்டும்.

தமிழ் மக்களுக்கான வெளிநாட்டுக் கொள்கை யென வரும் போது பிராந்திய அரசியலைக் கையாள் வதே மிகவும் முக்கியமானதாகும். சர்வதேச அரசியல் சக்திகளில் அமெரிக்கா தலைமையிலான மேற் குலகம் பிராந்திய அரசியல் சக்தியான இந்தியாவை அனுசரித்தே இலங்கைத் தீவை கையாளும். ஆனால், சீனா தானே நேரடியாக இலங்கையை கையாள முயற்சிக்கும். இதனால் தமிழ்தரப்பு தனது வெளி நாட்டுக்கொள்கையில் இந்தியாவைக் கையாள் வதையே பிரதான இலக்காகக் கொண்டிருக்க வேண்டிய தேவை உள்ளது.

ஆனால் இன அழிப்புக்கான சர்வதேச நீதி கோருவதற்கு அமெரிக்கா தலைமையிலான மேற் குலகத்தை அதிகம் கையாள வேண்டியிருக்கும். அதற்குரிய அரசியல் விழுமியங்கள் மேற்குலகத் திடம் தான் இருக்கின்றன. தவிர இந்தியா போரின்

பங்காளியாக இருந்தமையினால் இன அழிப்புக் கான நீதி கோருவதற்கு ஆதரவு தராது. இந்த இடத் தில் மேற்குலக முயற்சிகளை இந்தியா குழப்பாமல் பார்த்துக் கொள்வதற்கான செயற்பாடுகளை தமிழ்த் தரப்பு முன்னெடுக்க வேண்டும். இது விடயத்தில் இந்தியா நடுநிலை வகித்தாலே அது பெரிய செயலாக இருக்கும். இந்தியாவை நடுநிலைப்படுத்துவதில் தமிழ்நாடு பெரிய பங்கினையாற்ற முடியும்.

இலங்கைத் தீவில் செல்வாக்குச் செலுத்து வதற்கு அமெரிக்க – இந்தியக் கூட்டு இந்தோ – பசுபிக் மூலோபாயத்திட்டத்தையும், சீனா பட்டுப்பாதைத் திட்டத்தையும் முன்னெடுக்கின்றது. இங்கு அமெரிக்கா தனித்து நேரடியாக கையாளாமல் இந்தியாவுடன் இணைந்து கையாள்வதன் மூலம் இப்பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றது. இதன் மூலம் இலங்கை விவகாரத்தில் இந்தியாவை பகைத்துக் கொண்டு எதையும் செய் வதற்கு அமெரிக்க தலைமையிலான மேற்குலகம் தயாராக இல்லை என்பதே வெளிப்படுத்தப்படு கின்றது. இதனாற் தான் இந்தியாவைக் கையாள வேண்டிய தேவை தமிழ்த்தரப்பிற்கு அதிகம் நேருகின்றது.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்த வரை அமெரிக்காவிற்கு கேந்திரப் பிரச்சினை மட்டும் தான். ஆனால் இந்தியாவிற்கு கேந்திரப் பிரச்சினையுடன் தேசிய பாதுகாப்புப் பிரச்சினையும் உண்டு. ஒப்பீட்டு ரீதியில் அதற்கு தேசிய பாதுகாப்பு பிரச்சினையே முதன்மையானது. இது பிரித்தானியர் ஆண்ட காலத் திலிருந்த இந்தியாவிலிருந்து தொடருகின்ற ஒன்றாகும். இந்த பிரித்தானிய இந்தியாவின் பாது காப்புக் கொள்கையின் படி இலங்கைத்தீவு இந்தியா வின் பாதுகாப்பு எல்லைக்குள்ளேயே உள்ளது. அதனால் இலங்கையின் விவகாரங்களை இந்தியா தனது சொந்த நாட்டின் பிரச்சினையாகவே பார்க்கும்.

இந்தியாவிற்கு மேற்கு, வடக்கு, வடகிழக்கு என ஒரு வில் போல பாதுகாப்புப் பிரச்சினை உண்டு. இதனால் தனது பாதுகாப்பு மையங்கள் பலவற்றை தெற்கிலேயே நிறுவியுள்ளது. தமிழ்நாட்டில் அது குறைவு. கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலங் களில் அதிகம் உள்ளன. பாதுகாப்பு விவகாரத்துறை யிலும், வெளிவிவகாரத்துறையிலும் கேரளத்தை சேர்ந்தவர்கள் அதிகளவில் பணியாற்றுகின்றனர். இலங்கையில் இந்தியாவிற்கு எதிரான சக்திகள் காலூன்றினால் இந்தியாவுக்கு இந்தப் பாதுகாப்பு மையங்களுக்கெல்லாம் நெருக்கடி ஏற்படும். இதனை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றவும் முடியாது. மாற்றுவதற்கு பாதுகாப்பான இடங்களும் குறைவு.

இந்த நிலைமைகள் காரணமாக இலங்கை மீது இந்தியா அதிக கவனம் செலுத்துகின்றது. இந்தி யாவைப் பொறுத்த வரை அதற்கு இலங்கைத்தீவு முழுவதும் தேவை. தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்காமைக்கு பிரதான காரணம் இது தான். தமிழ் நாட்டிலும் அக் கோரிக்கை வலுப்படும் என்ற அச்சமும், இந்தியாவே தேசிய இனங்களின் சிறைக் கூடமாக இருக்கின்ற நிலையும் தனி நாட்டுக் கோரிக்கையை எதிர்ப்பதற்கான துணைக் காரணங்களாக இருந்திருக்கின்றன. தனி நாட்டுக் கோரிக்கை மட்டுமல்ல, ஒரு வலுவான சமஸ்டிக்கு கூட இந்தியா தயாராகவில்லை என்பது தான் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் சோகமான விடயம். இந்தியாவின் அதி உயர்ந்த பட்ச அரசியல் தீர்வு 13 வது திருத்தம் தான். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் அபிலாசைகளை 13வது திருத்தம் சிறிது கூட திருப்திப்படுத்தப் போவதில்லை.

ஆனால் இந்தியாவின் இந்தப் போக்கு தொடர்ச்சியாக நிலைபெற முடியாது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் வலுவாக காலூன்றி விட்டது. இலங்கை விரும்பினாலும் சீனாவின் ஆதிக்கத்தை நீண்ட காலத்திற்கு கீழிறக்க முடியாது. கொரோனா விற்குப் பின்னர் உலக ஒழுங்கு மேலும் மாற்ற மடையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. சிறீலங்கா அரசினைப் பொறுத்தவரை மேலும் மேலும் சீனா வின் பக்கம் சாயக்கூடிய நிலையே உண்டு. இதனை இந்தியா ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. தென் இலங்கையில் சீனா வலுவாக காலூன்றிய நிலையில் வடக்கு–கிழக்கையாவது முழுமையாக தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டிய தேவை அதற்குண்டு. பலாலி விமான நிலையம், காங்கேசன் துறை துறைமுகம், திருகோணமலைத் துறைமுகம் என்பவற்றிலெல்லாம் இந்தியா அக்கறைப்படுவது இதற்காகத்தான். இவற்றைவிட சம்பூர் பிரதேசம், தலை மன்னார் பிரதேசம், கொக்குளாய் பிரதேசம், வடமராட்சி கிழக்குப் பிரதேசம் போன்ற கேந்திரப் பிரதேசங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவேண்டிய தேவை இந்தியாவிற்கு உண்டு.

தமிழ் மக்களின் ஆதரவு இல்லாமல் வடக்கு–கிழக்கில் இந்தியா ஆதிக்கம் செலுத்த முடியாது. தவிர இன்று சிறீலங்காவின் மைய நீரோட்ட அரசியலுக்கு வெளியில் நிற்கும் சமூகப் பிரிவு தமிழ் மக்கள் தான். இதனால் தமிழ் மக்களைப் பயன்படுத்தித்தான் சிறீலங்கா அரசு மீது அதிக அழுத்தங்களை இந்தியாவினால் கொடுக்க முடியும். உண்மையில் இந்தியா தொடர்பாக தமிழ் மக்களுக்கு சார்பான பொறி இங்கு தான் உள்ளது. இந்தப் பொறியை தமிழ் மக்கள் பற்றிப் பிடிக்க வேண்டும். புவிசார் அரசியலில் கௌரவமான இடத்தையும் இதற்கூடாகத்தான் பெற முடியும்.

அடுத்தது தமிழ்நாட்டின் முக்கியத்துவம். தமிழ்நாட்டின் கரிசனைகளை நீண்டகாலத்திற்கு இந்தியாவினால் தட்டிக்கழிக்க முடியாது. இன்று ஈழத் தமிழர்கள் தொடர்பாக பொதுக் கருத்து தமிழகத்தில் வலுவாக வளர்ச்சியடைந்துள்ளது. ஈழத் தமிழர் விவகாரத்தை உலகத் தமிழர்களின் பொதுப் பிரச்சினையாக பார்க்கும் பார்வையும் அங்கு வளர்ந்துள்ளது. இதை விட புதிய தலைமுறையினர் மத்தியில் தமிழ்நாட்டிற்குரிய தமிழ்த்தேசியம் என ஒன்றும் வளரத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டு மக்களினால் ஒரு வலுவான அழுத்தத்தை மத்திய அரசிற்கு கொடுக்க முடியும். உலகத் தமிழர்களின் ஆதரவும் வலுவாக இருக்கின்றபோது மேலும் அழுத்தங்களைக் கொடுக்கலாம். இலங்கைத் தீவுக்கான புவிசார் அரசியல் போட்டியில் தமிழர் தாயகப் பிரதேசம் மட்டுமல்ல தமிழ்நாடும் கேந்திர இடத்தில் தான் இருக்கின்றது. இதன் கேந்திரப் பலம் தமிழர் தாயகப் பிரதேசத்தை விட அதிகமானது. தமிழ்நாடு இந்திய பெரும் நிலப்பரப்போடு நிலத் தொடர்ச்சியுடையது என்பதே இதற்கு காரணமாகும்.

தமிழ்நாட்டிற்கு வெளியே உள்ள மாநிலங்களில் முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் பெறுவது அழுத்தங்களைக் கொடுப்பதற்கு மேலும் உதவியாக இருக்கும். இந்தி பேசாத மாநிலங்கள் இது விடயத்தில் அதிக ஒத்துழைப்பினை தரக் கூடிய சூழல் ஏற்படலாம். இம் மாநிலங்கள் மத்திய அரசிடமிருந்து தமது உரிமைகளைப் பெறுவதற்கு இணைந்து செயற்பட வேண்டிய கட்டாயத்தைக் கொண்டுள்ளன. ஏற்கெனவே கருணாநிதியின் 'ரெசோ' அமைப்பு இதற்கான முயற்சியினைச் செய்திருந்தது. இது

## "நாடுகளுக்கு மட்டும்தான் வெளிநாட்டுக் கொள்கை தேவையென்றில்லை. விடுதலைக்காக போராடும் தேசிய இனங்களுக்கும் வெளிநாட்டுக் கொள்கை அவசியமானதாகும்"

போன்ற முயற்சிகளைப் பலப்படுத்துவது பற்றி ஆராய்தல் வேண்டும். இந்திய மத்திய அரசுடனான உறவாடலை ஈழத்தமிழ்த் தரப்பு தனித்து மேற்கொள்ளாமல் தமிழக சக்திகளுடன் இணைந்து செயற்படுவது இது விடயத்தில் ஆரோக்கியமாக இருக்கும்.

இங்கு கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய நிபந்தனை தமிழ்நாட்டின் கட்சி அரசியலுக்குள் மாட்டுப்படாமல் இருப்பதாகும். தமிழ்நாட்டுக் கட்சிகளிடம் நாம் பொது ஆதரவினையே கோரி நிற்க வேண்டும். கட்சி சார்புநிலை எடுக்கக்கூடாது. தமிழ்நாடு சந்திக்கும் பொதுப் பிரச்சினைகளில் பொது ஆதரவினை நாம் கொடுக்கலாம். அரசியல் கட்சிகளுக்கப்பால் பொது அமைப்புக்களின் ஆதரவையும் பெறுவது முக்கியமானது. இவைதான் அங்குள்ள அரசியல் கட்சிகளுக்கு அழுத்தங்களைக் கொடுக்கக்கூடியவையாக இருக்கும்.

போரின் இறுதிக்காலம் தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழகம் மீதும் அதன் தலைவர் கருணாநிதி மீதும் பலத்த விமர்சனங்களை தமிழ்த் தேசிய சக்திகள் முன்வைக்கின்றனர். கருணாநிதி மீது தவறுகள் இருக்கலாம். அதற்காக தமிழ்நாட்டின் மிகப்பெரிய கட்சியை நாம் எதிரியாக்கக் கூடாது. தவிர கட்சிக்கு புதிய தலைவர் தற்போது வந்துள்ளார். கட்சியின் அணி தமிழ்த்தேசிய அரசியலுக்கு ஆதரவானது என்பதை நினைவிற் கொண்டு உறவுகளைக் கட்டியெழுப்புவதே ஆரோக்கியமாக இருக்கும். பாராளுமன்றக் கட்சிகளிடம் முழுமையான கொள்கை உறுதிப்பாட்டை நாம் எதிர்பார்க்க முடியாது.

(21 ஆம் பக்கம் பார்க்கவும்)

# சீனாவின் இராஜதந்திரம்





நிஷா சேகர்-
பாதுகாப்பு, சர்வதேச விவகார செய்தியாளர், இந்தியா-

பாகிஸ்தானில் நெடுஞ்சாலை. கசகஸ்தானில் புகையிரதப் பாதை. லாவோசில் பாலம். நம் நாட்டில் துறைமுகம். இவை எல்லாம், சீனாவின் கட்டு மானங்கள். Belt and road initiative (BRI) என்று ஒரு திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வரு கிறது இந்த கம்யூனிச நாடு. பட்டுப்பாதை பொருளா தார வழித்தடம் (silk road economic belt) மற்றும் கடல்வழிப் பட்டுப்பாதை (maritime silk road) முன்னெடுப்பு என்பதை இந்த திட்டத்தின் பெயர் குறித்து நிற்கிறது. இந்த முன்னெடுப்பின் கீழ், ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள பெரும் பாலான நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையே கப்பல் போக்குவரத்துகள் மேம்படும். ஐரோப்பாவிலும் மேற்காசியாவிலும் உள்ள நாடுகளுக்கும் சீனாவுக் கும் இடையே சாலை மற்றும் புகையிரதப் போக்கு வரத்துகள் மேம்படுத்தப் படும். இந்தப் போக்குவரத்து மேம்பாடுகளை விட இன்னும் சில முக்கியமான வர்த்தக ரீதியான திட்டங்களையும் சீனா செயல் படுத்தி வருகிறது. இந்த திட்டத்தில், பல ட்ரில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது.

## BRI எவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது?

உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக, ஒரு நாடு சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கை யெழுத்திடும். அதன் அடிப்படையில், சீனா அந்த நாட்டுக்கு கடன் கொடுத்து, கட்டமைப்புக்காக வேறு சில உதவிகளையும் செய்யும். பங்குனி 2020 இல் திரட்டப்பட்ட விபரங்களின் படி, இந்த BRI திட்டத் தின் கீழ் 138 நாடுகள் சீனாவுடன் ஒப்பந்தம் செய் துள்ளன. இவற்றுள் 38 ஆபிரிக்க நாடுகள், 17 மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா நாடுகள், 34 ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள நாடுகள் (இவற்றுள் சில நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ளவை), 25 கிழக்கு ஆசிய நாடுகள், 18 லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள், 6 தென் கிழக்கு ஆசிய நாடுகள் அடக்கம். இந்நாடு களில் சீன அரசு உட்கட்டமைப்பு மேம்பாட்டு (infrastructure development) திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டம் தான் அண்மைக்கால வரலாற்றில் மிகப்பெரிய அளவில் செயல்பட்டு வரும் ஒரு வர்த்தகத் திட்டம் ஆகும். வர்த்தக ஆதாயம் இல்லாமல் சீனா எதுவும் செய்யுமா என்ன? இந்த BRI திட்டம் மூலம் அந்த நாடுகளை தரை மார்க்க மாகவோ, கடல் மார்க்கமாகவோ சீனாவுடன் இணைப்பது தான் அதன் நோக்கம். இவ்வாறு இணைப்பதனூடாக வர்த்தகப் பொருட்களும் மனித வளங்களும் தடையின்றிப் பரிமாறப்பட வழி செய்வது அதன் நோக்கம். இவ்வர்த்தகப் பரிமாற்றத்தின் மையப் புள்ளியாகவும் பெரும்பான்மை பங்குதாரராகவும் இருப்பதனூடாக உலக பொருளாதாரத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க சீனா முயற்சி எடுக் கிறது. இதை செயல்படுத்துவதன் மூலம் உலகில் அமெரிக்காவுக்கு போட்டியாக அடுத்த ஒரு வல்லரசாக உருவெடுக்க சீனா முயற்சிக்கிறது.

பண்டைய காலத்தில், பட்டுப் பாதை என்று ஒரு வர்த்தக பாதை இருந்தது. இது ஆங்கிலத்தில் silk route என்று அழைக்கப்பட்டது. ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா என பல பகுதிகளை இந்தப் பாதை சீனாவுடன் இணைத்தது. கிறிஸ்துவுக்கு முன் 200 ஆண்டுகளுக்கு முன்னர் பயன்பாட்டில் இருந்த பட்டுப்பாதையின் மூலம் நடைபெற்ற பரிமாற்றங்கள் சீனா, எகிப்து, மெசபொடேமியா, பாரசீகம், இந்தியா,

# "வர்த்தக ஆதாயம் இல்லாமல் சீனா எதுவும் செய்யுமா என்ன? இந்த BRI திட்டம் மூலம் அந்த நாடுகளை தரை மார்க்கமாகவோ, கடல் மார்க்கமாகவோ சீனாவுடன் இணைப்பது தான் அதன் நோக்கம்"

ரோம சாம்ராஜ்ஜியம், ஆகிய இடங்களின் வளர்ச்சிக்கும் நவீன உலகை உருவாக்குவதற்கான அடிப்படைக்கும் வழிவகுத்தன.

2013ம் ஆண்டில் கசகஸ்தானில் பேசிய சீன அதிபர் ஷீ, அந்த பட்டுப்பாதையைப் பின்பற்றி ஒரு பொருளாதார வழித்தடத்தை (economic belt) உருவாக்க வேண்டும் என்று தெரிவித்தார். பின்னர் ஒரு மாதம் கழித்து இந்தோனேசியாவில் பேசிய போது 21ம் நூற்றாண்டுக்கான கடல்வழி பட்டுப்பாதை உருவாக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். இந்த இரு இடங்களிற் தான் அவர் முதல் முதலில் இந்த BRI பற்றி பேசியிருக்கிறார்.

போக்குவரத்து மட்டுமல்லாமல், எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள் (oil refineries), தொழிற்சாலைகள், மின் நிலையங்கள், சுரங்கங்கள், ஒளி இழை தகவற்பரிமாற்ற வலையமைப்புகள் (fibre optic network) என்பனவும் இந்த BRI இல் அடங்கும். அனைத்து நாடுகளும் சீனாவுடன் வர்த்தக உறவில் ஈடுபட வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காக தான் இவை அனைத்தையும் செய்து வருகிறது சீனா.

சீனாவுடன் எந்த நாடு BRI ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டாலும், அது இரு நாடுகளுக்கும் இலாபகரமாக இருக்கும் என்று சீனா கூறி வருகிறது. உதாரணத்திற்கு சீனா – பாகிஸ்தான் இடையே இருக்கும் ஒப்பந்தத்தை எடுத்துக் கொள்ளலாம். பொருளாதார ரீதியாக பிரபலமாகாத நாடு பாகிஸ்தான். வெளிநாட்டு முதலீடுகள் அதிகம் பெறாத ஒரு நாடும் கூட. ஆனால், 2001 இல் சீனா பாகிஸ்தானின் குவாடாரில் (Gwadar) ஒரு துறைமுகம் கட்டுவதற்கு முன் வந்தது. 2018 க்குள் அந்த துறைமுகத்துடன் நெடுஞ்சாலை ஒன்றையும் புகையிரதப் பாதை ஒன்றையும் கட்டி அவற்றையும் BRI யின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டது சீனா. இதற்கு 62 பில்லியன் டொலர் செலவாகியது. பாகிஸ்தானில் கட்டப்பட்ட இவற்றின் முக்கியத்துவம் என்னவென்றால் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்காவை இணைக்கும் பொருளாதார வழித்தடம் (economic belt) பாகிஸ்தானின் குவாடாரில் தான் கடல்வழி பட்டுப்பாதையுடன் (maritime silk road) இணைகிறது. இரு பட்டுப்பாதைகள் இணையும் இடம் என்றால், அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்று நினைத்துப் பாருங்கள். இதன் மூலம் பாகிஸ்தானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி பெற்றது. சீனாவுடனான நட்பும் நெருக்கமானது.

இந்த திட்டங்கள் மூலம் சீனாவின் கட்டுமானம் மற்றும் பொறியியல் நிறுவனங்களும் வளர்ச்சி அடைந்தன. அவர்கள் நாட்டினுள் வாய்ப்பு கிடைக்காத நிறுவனங்களுக்கு BRI மூலம் வாய்ப்புகள் வந்தன. அதனால் சீனாவின் பொருளாதாரமும் வளர்ச்சி அடைந்தது. உலகின் மிகப்பெரிய கட்டுமான நிறுவனங்கள் பத்தில் ஏழு நிறுவனங்கள் சீனாவைச் சேர்ந்தவை. இது மட்டுமன்றி BRI திட்டங்களின் கட்டுமானத்திற்காக தேவைப்படும் வேலையாட்களையும் சீனா வழங்கி வருகிறது. சீன வேலையாட்களும் இந்த பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பது இந்த BRI ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாடுகளுக்கு சீனா வைத்திருக்கும் ஒரு நிபந்தனை. BRI ஒப்பந்தங்களின் மூலம் தங்கள் நாடு மற்றும் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறுவதற்கான கடன் கிடைக்கிறது என்பதால் இந்த நிபந்தனைக்கு எந்த நாடும் பெரிய அளவில் எதிர்ப்பு தெரிவிப்பதில்லை.

ஆப்கானிஸ்தான், யெமன், ஈராக் போன்று பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய, ஊழலால் பாதிக்கப்பட்ட, கிளர்ச்சியாளர்களால் பிளவுபட்ட, உள்நாட்டுப் பிரச்சினை உள்ள நாடுகளில் மற்ற எந்த ஒரு நாடும் முதலீடு செய்ய தயங்கும். ஆனால் இந்த நாடுகளில் தான் மேம்பாட்டு பணிகளைச் செய்து வருகிறது சீனா. இந்த திட்டத்தின் மூலம் இந்த

நாடுகளுக்கு கடன் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நாடுகள் சீனாவிற்கு கடனை நிச்சயமாக திரும்பிக் கொடுக்க வேண்டும். ஆனால் அதற்கான வாய்ப்புகள் மிக மிக குறைவு. இந்த ஆண்டின் முதல் பாதியில் கூட கொரோனா பாதிப்பு காரணமாக BRI கடனை திரும்பிச் செலுத்த அவகாசம் வேண்டும் என்று சில நாடுகளும், கடனின் ஒரு பகுதியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஒரு சில நாடுகளும் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளன. மேலும் கிளர்ச்சி, ஊழல் போன்ற அந்நாடுகளின் உள்நாட்டு விவகாரங்கள் BRI நாடுகளின் கடனை திரும்ப செலுத்துவதற்கான ஏற்ற சூழலை ஏற்படுத்துவதாக தெரியவில்லை.

இது எல்லாம் அறிந்திருந்தாலும் சீனா ஏன் அந்த நாடுகளுக்கு தொடர்ந்து கடன் கொடுத்து வருகிறது? வர்த்தகத்தையும் தாண்டி இதற்கு ஒரு காரணம் இருக்கிறது. உதாரணமாக, இத்திட்டத்தின் ஒரு பகுதியான இலங்கையில் இருக்கும் துறைமுகத்தை எடுத்துக் கொள்வோம். 2017ம் ஆண்டே இலங்கையால் சீனாவிற்கு கடனை திருப்பித் தர முடியாது என்று தெளிவாக தெரிந்து விட்டது. அதனால் சீனா கட்டி வந்த அந்த துறைமுகத்தின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டை அடுத்த 99 ஆண்டுகளுக்கு சீனாவிடமே கொடுத்தது இலங்கை. அதே போல் பாகிஸ்தானில் ஒரு துறைமுகத்தின் 40 ஆண்டு குத்தகையும் (lease) சீனாவிடம் உள்ளது. வட ஆபிரிக்காவில் Djibouti என்று ஒரு நாடு இருக்கிறது. அந்த நாட்டில் சீனாவின் கடற்படை தளம் ஒன்று இருக்கிறது. இதே போல் இந்திய பெருங்கடலில் துறைமுகங்களை தன் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதன் மூலம் இந்திய பெருங்கடலில் தன் பலத்தை காட்டி வருகிறது சீனா. இது தான் முத்துமாலைத் திட்டம் (string of pearls) என்று அழைக்கப்படுகிறது. இதன் மூலம் உலக உருண்டையின் இந்த பகுதியில் பல துறைமுகங்களில் தனது கடற்படைத் தளத்தை நிறுவும் நோக்கத்தில் சீனா இருக்கிறது. அதனால் ஆபத்தான நாடுகளில் முதலீடு செய்வதன் மூலம் சீனாவிற்கு கடன் திரும்பக் கிடைக்கவில்லை என்றாலும் வல்லரசு ஆக வேண்டும் என்ற அதன் முக்கியமான நோக்கம் நிறைவேறுகிறது.

**“உலகின் மிகப்பெரிய கட்டுமான நிறுவனங்கள் பத்தில் ஏழு நிறுவனங்கள் சீனாவைச் சேர்ந்தவை. இது மட்டுமன்றி BRI திட்டங்களின் கட்டுமானத்திற்காக தேவைப்படும் வேலையாட்களையும் சீனா வழங்கி வருகிறது. சீன வேலையாட்களும் இந்த பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பது இந்த BRI ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாடுகளுக்கு சீனா வைத்திருக்கும் ஒரு நிபந்தனை”**

அமெரிக்கா வெளிநாடுகளில் முதலீடு செய்வதை குறைத்துக்கொண்டு இருக்கிறது. அதனால் பல உலக நாடுகளின் ஆதரவை இழந்து வருகிறது. ஆனால் சீனா அமோகமாக முதலீடு செய்து வருவதால் உலக நாடுகளின் ஆதரவு அதற்கு அதிகரித்து வருகிறது. சிறிலங்காவும் அதற்கு விதிவிலக்கல்ல. நாம் விரைவில் சீன மொழி கற்றுக்கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டாலும் ஆச்சரியம் இல்லை.

---

(18 ஆம் பக்க தொடர்ச்சி)

எனவே புவிசார் அரசியல், தமிழ்மக்களின் ஆதரவு, இந்திய முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவு என்கின்ற அழுத்தக் கருவிகளைக் கொண்டு இந்தியாவை வழிக்குக் கொண்டுவர நாம் முயற்சிக்க வேண்டும்.

இந்தியாவை வழிக்குக் கொண்டுவந்து விட்டால் அமெரிக்க தலைமையிலான மேற்குலகத்தை வழிக்குக் கொண்டுவருவது சிரமமான காரியமல்ல. இந்தோ–பசுபிக் மூலோபாயத் திட்டத்தை தமிழ் மக்களின் ஆதரவின்றி ஒரு அடி கூட முன்னே கொண்டுசெல்ல மேற்குலகத்தினால் முடியாது. சீனாவின் உலகளாவிய செல்வாக்கை தடுப்பதற்கு இலங்கைத் தீவில் சீனாவின் செல்வாக்கினை கீழிறக்க வேண்டியது அவர்களுக்கு அவசியமாக வுள்ளது. எனவே புவிசார் அரசியல், சர்வதேச வெகுசன சமூகம், மேற்குலக முற்போக்கு அணியினர் என்கின்ற கருவிகளைக் கொண்டு அமெரிக்க தலைமையிலான மேற்குலகத்தை வழிக்குக் கொண்டு வர நாம் முயற்சிக்க வேண்டும். இது விடயத்தில் புலம்பெயர் மக்களுக்கும் நிறையவே பொறுப்பு இருக்கின்றது.

(24 ஆம் பக்க தொடர்ச்சி)

கல்வியை தொடர்பவர்களாக உள்ளனர். புத்தி யீவிகள் என்று கூறப்படுகின்றவர்களில் ஆரம்ப சமூகமாக எமது சமூகம் இருக்கிறது. வடக்கில் ஆரம்பித்திருந்தாலும் இப்போது கிழக்கிலும், மலையகத்திலும் மற்றும் இலங்கையில் தமிழர் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல் லாம் எமது அமைப்பு செயல்பட்டு வருகிறது. இப்போது நானூறுக்கும் மேற்பட்ட உறுப்பினர் கள் அங்கம் வகித்தாலும் எங்களுக்கென ஒரு அலுவலகம் இல்லை. இணையத்தினூடாக மெய்நிகர் அலுவலகம் ஊடாகவே பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

2019 ஆம் ஆண்டுவரை எல்லா மாவட்டங் களுக்கும் சேர்த்து சிறகுகள் நிர்வாக கட்டமைப்பு இயங்கி வந்தது. பின் எங்கள் அமைப்பு நிலைத்து நீடித்திருப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் எம் நிர்வாகக் கட்டமைப்பில் சில மாற்றங்களை கொண்டு வந்தோம். மாவட்டப்பிரிவுகளை உருவாக்கினோம்.

எமது செயற்பாடுகளை விஸ்தரித்து இலகுபடுத்துவதற்காக சிறகுகள் அமையத்தை 6 மாவட்ட நிர்வாக பிரிவுகளாக பிரித்துள்ளோம்.

1. மட்டக்களப்பு – அம்பாறை
2. யாழ்ப்பாணம்
3. மலைநாடு (பதுளை, மொனராகலை, கண்டி, நுவரேலியா, மாத்தறை)
4. வவுனியா – மன்னார்
5. கிளிநொச்சி – முல்லைத்தீவு
6. திருகோணமலை

ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் ஒவ்வொரு நிர்வாகக் கட்டமைப்பு இயங்கிக் கொண்டிருக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலு முள்ள தலைவர், செயலாளர், பொருளாளரை உள்ளடக்கி இயக்குனர் சபையை உருவாக்கி னோம். இதுவே சிறகுகள் அமையத்தின் தலைமை சபையாக இருக்கும். இதனால் மாவட்ட பிரதேச வேறுபாடுகளை கடந்தும் எங்களால் வேலை செய்யக் கூடியதாக இருக்கின்றது. இங்கு எல்லோருமே தன்னார்வலர்களாக இணைந் துள்ளதால் கட்டாயமாக இந்தப் பணியை இவர் செய்ய வேண்டும், இதனை இவர் செய்ய வேண்டும் என்றில்லாமல் நேரம் கிடைக்கும் போது ஒவ்வொருவரும் திட்டமிட்டு இந்தப் பணியை முன்னெடுத்து வருகின்றோம். நூற்றுக்கணக்கான இளையோர்கள் எமது அணியில் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருப்பதனால் எங்களால் வருடம் முழுவதும் தொடர்ந்து இயங்கக் கூடிய தாக உள்ளது.

எங்களுக்கு நிதிப்பிரச்சினை பாரிய சவாலாக இருந்ததால், நண்பர்களின் பிறந்த தினங்கள், உறவுகளின் நினைவு தினங்களை முன்னிட்டு நிதி திரட்டும் ஒரு செயற்திட்டத்தை முன்னெடுத்தோம். உதாரணமாக நினைவு தினத் துக்கு ஒருவர் அன்பளிப்பு செய்யும் சிறு தொகைப் பணத்தில் பத்துப் பதினைந்து புத்தகங்களை வாங்கி அன்பளிப்பு செய்வோம். பழைய நூலகங் களை புனரமைத்தல், புதிய நூலகங்களை உருவாக்குதல் என பல்வேறு பணிகளுக்கு இப்படி யான உதவிகள் சென்றடைந்திருக்கின்றன.

இளையோர்களின் பலத்துடன் பயணித்து வருவதால் நாங்கள் அனைத்து நிறுவனங் களுடனும் உதாரணமாக வேறு அமைப்புக் கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றோடும் இணைந்து பயணிக்கும் கொள்கையை நாங்கள் வைத்திருக்கின்றோம். உதாரணமாக நூலகம் நிறுவனம் ஆவணப்படுத்தல் சார்ந்து வேலை செய்வதால் அவர்களோடு சேர்ந்து தன்னார் வலர்களாக என்னென்ன பங்களிப்புக்களை வழங்கலாமோ அவற்றை வழங்கி வருகிறோம். சமூகம் சார்ந்து செயற்படும் சுற்றுச் சூழல் பாது காப்பு அமைப்புகளுக்கும் எங்களது பங்களிப்புக் களை வழங்கி வருகின்றோம்.

நான்காவது வருட நிறைவில் நாங்கள் முக்கியமாக வலியுறுத்தும் விடயம், இணைந்து பயணித்தல். தனி மனித தலைமைத்துவம் இல்லாமல் ஒரு கூட்டு தலைமைத்துவத்தின் கீழ் ஒரு கூட்டு சிந்தனையின் கீழ் இணைந்து பயணித்தல் என்கிற கொள்கையை நாங்கள் முக்கியமாக கடைப்பிடித்து வருகின்றோம்.

- மகளிர்துறை
- தகவல் தொழிநுட்பத் துறை
- விளையாட்டுத் துறை
- சுற்றுச் சூழல் துறை
- சட்டப் பிரிவு

இப்படியான பிரிவுகள் இருந்தாலும் கல்வி சார்ந்தே எமது பணிகள் கூடுதலாக இருக்கும். இப்படியான பிரிவுகள் இருப்பதனால் குறித்த பிரிவுகளில் சிறப்பாக ஆர்வமுடைய இளையோர் அந்த துறையில் இணைந்து பயணிக்க வசதியாக இருக்கும். இதனால் தங்களால் இயன்ற செயற் திட்டங்களை முன்னெடுப்பதற்கும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களை தொடர்வதற்கும் வசதியாக இருக்கும்.

சிறகுகளினால் பின்வரும் முக்கிய செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

- படிப்பகம்
- நாணல்
- விதைவிருட்சம்
- அவள்

பாடசாலை மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்க நூலகங்களை உருவாக் குதல், பாடசாலை நூலகங்களை தாண்டி கிராமிய நூலகங்கள், சிறுவர், முதியோர் இல்ல நூலகங் களை உருவாக்குதல், இவற்காக புத்தக சேகரிப்பு பணியினையும் கண்காட்சிகள் மற்றும் கருத் தரங்குகள் ஊடாக மேற்கொண்டு வருகின்றோம்.

நாங்கள் ஒரு செயற்திட்டத்தை செய்யும் போது அதனை முழுமையாக ஆவணப்படுத்தும் செயற்பாட்டையும் செய்கிறோம். ஒரு பாடசாலை க்குரிய நூலகத்தை உருவாக்கும் போது எவ் வகையான அம்சங்கள் இருக்க வேண்டும் என்பதை முற்கூட்டியே தீர்மானிக்கிறோம். ஒரு கலந்துரை யாடலை செய்ய வேண்டும் என்றால் எவ்வாறான செல்திசையுடன் அது இருக்க வேண்டும் என்பதை யும் முற்கூட்டியே தீர்மானிக்கிறோம். இதனால்

## “உங்களுடைய நேரத்தை நீங்கள் எமது சமூகத்துக்காக பயன் மிகுந்த வழியில் செலவிட விரும்பினால் சிறகுகள் அமையத்துடனும் இணைந்து பயணிக்கலாம்”

விளையும் நன்மை என்னவெனில், எங்களுடைய அமைப்பை சேர்ந்தவர்கள் இன்னொரு இடத்தில் இப்படியான செயலை செய்வதாக இருந்தாலும் அல்லது வேறு அமைப்புகளுடன் சேர்ந்து குறித்த செயல்திட்டத்தை செய்வதாக இருந்தாலும் அவற்றுக்குரிய திட்டமிடல் நேரம் குறைவடை கின்றது. இதனூடாக எங்கள் அமைப்பும் வளர்ந்து செல்வதனைக் காட்டிலும் சமூகமாக முன்னேறு தல் என்கிற கருதுகோள் வெற்றியடைகிறது.

30 வயதுக்குள் இருக்கும் பாடசாலை கல்வியை நிறைவு செய்தவர்கள், பல்கலைக்கழக கல்வியை தொடர்பவர்கள் சிறகுகள் அமையத் தோடு இணைந்து பயணிக்கலாம். 30 வயதுக்குள் இருப்பவர்கள் மட்டுமே சிறகுகள் அமையத்தின் செயற்பாட்டாளர்களாக பயணிக்கலாம். இதற்கு மேல் உள்ளவர்கள் சிறகுகளின் வழிகாட்டிகளாக தங்கள் பயணத்தை தொடரலாம்.

உங்களுடைய நேரத்தை நீங்கள் இந்த சமூகத்துக்காக பயன்மிகுந்த வழியில் செலவிட விரும்பினால் சிறகுகள் அமையத்துடனும் இணைந்து பயணிக்கலாம். தமிழரின் கல்வி சார்ந்து அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வை முன்வைப்பவர்களாக நாம் என்றும் செயற்படுவோம். தமிழர் பிரதேசத்தின் கல்வி நிலையை உயர்த்த பாடுபடும் சிறகுகளுக்கு என்றும் நாம் உறுதுணையாக இருப்போம்.

h

# கல்விக்கான இலட்சியப் பயணத்தில் தமிழ் இளையோர்கள்



எம் தாயகத்து தமிழ் இளையோர்கள் கல்விக்கான இலட்சியப் பயணத்தில் பெரும் நம்பிக்கைகளோடு பயணித்து வருகிறார்கள்.

கடந்த பத்தாண்டுகளாக தமிழர் பிரதேசங்களில் கல்வியின் நிலை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த நேரத்தில் அதனை எப்படியாவது மீட்டெடுத்து விடலாம் என்கிற நம்பிக்கையோடு விடா முயற்சியுடன் தமிழர் பிரதேசமெங்கும் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறார்கள் சிறகுகள் அமைய செயற்பாட்டாளர்கள். அமைப்பில் எல்லோருக்கும் சமவாய்ப்பு, புரிந்துணர்வு, நம்பிக்கையான நட்புணர்வு, வேகத்துடனும் விவேகமாகவும் துணிச்சலுடனும் செயற்படல், உலகின் அன்றாட மாற்றங்களை உள்வாங்கி பயணித்தல் போன்ற சிறப்பியல்புகளோடு பயணிக்கிறது சிறகுகள் அமையம்.

செயற்பாடுகளை இலகுவாக்க ஆறு மாவட்ட நிர்வாக பிரிவுகளாக பிரித்து பல்வேறு துறைகளையும் உருவாக்கி முக்கியமான பல செயற்திட்டங்கள் சிறகுகள் அமையத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. படிப்பகங்களை உருவாக்குதல், நூல்களை சேகரித்தல், கருத்தரங்குகளை நடாத்துதல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு என மேலும் பல்வேறு பணிகளையும் சிறப்பான முறையில் முன்னெடுத்து வருகின்றார்கள். பொருத்தமான அமைப்புக்கள், நிறுவனங்களுடன் இணைந்து பயணித்து வருவதோடு மேலும் பல அமைப்புகளுடன் இணைந்து செயற்பட ஆர்வமாகவும் உள்ளார்கள்.

**சிறகுகள் அமைய ஒருங்கிணைப்பாளர் தர்மரட்ணம் சுஜீவன் தெரிவித்த கருத்துகள் வருமாறு:** சிறகுகள் அமையம் ஐந்தாவது ஆண்டில் கால் பதித்து இருக்கின்றது. இந்த நான்கு வருடங்களில் நாங்கள் கடந்து வந்த பாதை மற்றும் செயற்படுத்திய செயற்திட்டங்கள் தொடர்பில் நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என இருக்கின்றோம். யாழ். மாவட்டத்தை தளமாக கொண்டு தான் 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சிறகுகள் என்கிற இந்த கல்வி சார்ந்து செயற்படும் அமைப்பினை தன்னார்வமாக சில இளையோர்கள் சேர்ந்து உருவாக்கினோம். 30 வரையிலான இளையோர்கள் இணைந்து அன்று செயற்பாட்டைத் தொடங்கி இருந்தோம்.

கல்விக்கான இலட்சியப் பயணம் என்பதே எங்கள் குறிக்கோளாக இருந்தது. இலங்கையின் தமிழர் பிரதேசங்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாகவே எமது பயணம் அமைய வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தோம். அதிலும் கல்வி நடவடிக்கைகளில் கொப்பி, புத்தகங்களை, காலணிகளை கொடுப்பது என்றில்லாமல் உண்மையில் அடி மட்டமாக (வேர் நிலையில்) இருக்கும் கல்வி சார்ந்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பாகவே எமது ஆரம்பம் இருந்தது. எமது அமைப்பின் செயற்பாட்டாளர்கள் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு பல்கலைக்கழகங்களில்

(22 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 12.11.2020 அன்று வெளியிடப்பட்டது.